Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 209 | வியாழக்கிழமை 23 ஜூன் 2022 | ஆனி 09 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50



முச்சந்தி முரளி

"மூழ்கிற கப்பலை விட தத்தளிக்கிற கப்பலில ஏறுறதுதான் கடும் ஆபத்து கண்டியளோ..."

# பொருளாதாரத்தை மீட்பதே பிரச்சினைகளுக்கான தீர்வு

## கடன்களால் நாட்டை மீட்க முடியாது
## சர்வதேச நாணய நிதியமே ஒரே நம்பிக்கை
## பிரதமர் ரணில் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

நமது பொருளாதாரம் முழுமையான சரிவைச் சந்தித்துள்ளது. அதுதான் இன்று நம்முனுள்ள மிகத் தீவிரமான பிரச்சினை. சிறிலங்காவின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 5 பில்லியன் டொலர் கடன் பெறப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்து உதவுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இந்த நிதி உதவிகள் நன்கொடைகள் இல்லை என்பதையும், அவற்றைத் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் நமக்கும் இருக்க வேண்டுமென்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். 13 ➤



## யாழ். கோட்டை அகழியில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 23

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் கோயிலுக்குப் பின்னாலுள்ள அகழியில் இனந் தெரியாத நபர் ஒருவரின் சடலம் நேற்று 15 ➤

## கடலுக்கு சென்ற மீனவர்கள் மாயம்

யாழ்., ஜூன் 23

வடமராட்சி, சக்கோட்டையில் இருந்து நேற்றுமுன்தினம் கடற்றொழி 15 ➤

## தொழிற்சங்க நடவடிக்கை தடையை நீடித்தது மன்று!

கொழும்பு, ஜூன் 23

பொதுமக்களுக்கான மின்சார விநியோகத்துக்கு தடங்கல் ஏற்படுத்தும் வகையில், எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையிலும், வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுவதற்கு இலங்கை மின்சாரசபை பொறியியலாளர்கள் சங்கத்துக்கு நீதி 15 ➤

## இடைக்கால பட்ஜெட்டில் ரூ.200 பில். நிவாரணம்

கொழும்பு, ஜூன் 23

ஓகஸ்ட் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 200 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:- 15 ➤

## அத்தியாவசிய பணியாளருக்கே இன்று பெற்றோல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகிலுள்ள கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கே பெற்றோல் விநியோகிக்கப்படும் என்றும், ஏனையோர் வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், பிரதேச செயலகம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வகைப்படுத்தப்பட்ட அத்தி 15 ➤



## ரணில் வீடு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 23

கொழும்பிலுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. 13 ➤

## பிரதேச செயலகப் பணியாளருக்கு பெற்றோல் நிரப்புவதில் சலுகை!

*வரிசையில் நிற்கும் மக்கள் கடும் விசனம்*

யாழ்ப்பாணம், ஜூன் 23

பிரதேச செயலகங்களுக்கு கீழ் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலை 15 ➤

## சிறிலங்காவுக்கு எதிராக அமெரிக்க வங்கி வழக்கு

கொழும்பு, ஜூன் 23

ஜூலை 25 ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சர்வதேச பிணையங்களுக்காக, 25 வீத முதலீட்டை செய்துள்ள அமெரிக்க நிறுவனமொன்று, ஆரம்ப முதலீடு மற்றும் அதற்கான வட்டியை அறிவிடுவதற்காக சிறிலங்காவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. 15 ➤



## தருமபுரத்தில் வீடு புகுந்து அதிகாலையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

கிளிநொச்சி, தருமபுரத்திலுள்ள வீடொன்றுக்குள் புகுந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 15 ➤

## தத்தளிக்கிறதே தவிர மூழ்கவில்லை கப்பல்

எம்.பியான பின்னர் தம்மிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

சிறிலங்கா என்பது வேகமாக மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பல் அல்ல. தத்தளித்துக்கொண்டி[illegible]ருக்கும் கப்பலே என்று நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா தெரிவித்துள்ளார். 15 ➤

## சிறிலங்கா வருகிறார் மோகன் குவாத்ரா

கொழும்பு, ஜூன் 23

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் மோகன் குவாத்ரா இன்று சிறிலங்கா வரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 13 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆக்கிரமிப்பின் வடிவமாக புத்தர் மாற்றப்பட்டுள்ளார்

## நாடாளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 23**

**நீதிமன்ற கட்டளைகளை பிக்குமார் மீற முடியுமா? அப்படி மீறும் பிக்குமார்களுக்கு நீதிமன்றங்கள் வழங்கும் தண்டனை என்ன? நீதிமன்றத்தின் கட்டளையை மீறும் உரிமையை பிக்குகளுக்கு யார் கொடுத்தது?. கருணை, காருண்யம், அன்பு, சகோதரத்துவம் தொடர்பில் கற்பித்த புத்த பகவானை ஒரு யுத்த வடிவமாக, ஆக்கிரமிப்பின் வடிவமாக சிங்களத் தலைவர்களும் பிக்குகளும் மாற்றியுள்ளனர் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக ஆதிசிவனை வழிபட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை என்னும் வாழ்விடத்தில், பிக்குகள், ஏதுமறியாத அப்பாவி சிங்கள மக்களை அழைத்து வந்து நூற்றுக்கணக்கான இராணுவம், பொலிஸார், கடற்படையின் பாதுகாப்போடு புத்தபகவானின் சிலையை வைப்பதற்காக முற்பட்டார்கள். கருணை, காருண்யம், அன்பு, சகோதரத்துவம் பற்றிக்கற்பித்த புத்த பகவானை ஒரு யுத்த வடிவமாக, ஆக்கிரமிப்பின் வடிவமாக சிலை நிறுவ முற்பட்டபோது முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்கள், ஏனைய மாவட்டங்களிலிருந்து சென்ற தமிழர்கள் அங்கே ஒரு போராட்டத்தை நடத்தி அதனைத் தடுத்துள்ளார்கள்.

ஏற்கனவே நீதிமன்றத்தின் தடை உத்தரவுள்ளது. இங்கே இரு மதம் சார்ந்தவர்களும் கட்டுமானப்பணிகள் எதனையும் செய்யக்கூடாது என்று முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவ்வாறான நீதிமன்ற உத்தரவை மீறி இந்த நாட்டிலே பிக்குகள், பொலிஸாரையும் வைத்துக்கொண்டு புத்தபகவானின் சிலையை நிறுவ முடியுமா? நீதிமன்றத்தின் அதிகாரத்தை மீறும் உரிமையை பிக்குகளுக்கு யார் கொடுத்தது?

தமிழர்களின் தொல்லியல் இடமான நீராவியடிப்பிள்ளையார் கோவிலடியில் வலுக்கட்டாயமாக புத்தர் சிலையை வைத்தார்கள். அந்த இடத்துக்கு வந்த பிக்கு புற்றுநோயால் இறந்தபோது அவரின் உடலை அந்த இடத்தில் எரித்தார்கள். அதுவும் நீதிமன்றக் கட்டளையை மீறித்தான் எரித்தார்கள். இவ்வாறு நீதிமன்றக் கட்டளைகளைக் மீறும் பிக்குமாருக்கு நீதிமன்றங்கள் என்ன தண்டனை வழங்குகின்றன? இது வெட்கப்பட வேண்டிய விடயம் இல்லையா? நீதியை மதிக்காத நாட்டில் எப்படி உங்களால் சகோதரத்துவத்தை உருவாக்க முடியும்?

நீங்கள் குருந்தூர்மலையில் செய்யும் அநியாயம், நீங்கள் செய்யும் கர்ம வினை உங்களை வாழ விடாது. -என்றார். (ம-22)

## மே 9 வன்முறைகள்: மேலும் ஐவர் கைது!

கொழும்பு, ஜூன் 23

நாடெங்கிலும் மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் மொரட்டுவ மாநகர சபை உறுப்பினர் உட்பட 5 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மொரட்டுவ மாநகரசபை உறுப்பினர், மொரட்டுவ மாநகர முதல்வரின் பிரத்தியேக செயலாளர், மொரட்டுவ மாநகர சபையின் பாதுகாவலர், சுகாதார ஊழியர் மற்றும் மாநகர சபை ஊழியர் ஒருவரும் அடங்குவர். (ம)

## அனுருத்த விடுதலை

கொழும்பு, ஜூன் 23

சமூக வலைத்தளங்களில் குழப்பத்தை ஏற்படுத்தும் விதமான கருத்துக்களை வெளியிட்டாரென்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அனுருத்த பண்டாரவை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் கெமிந்த பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சாலிய பீரிஸ், குற்றச்சாட்டைத் தொடர முடியாது என முன்னதாக நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். இதன்படி அவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார். பொலிஸாரும் பிரதிவாதியும் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதிவான், சந்தேகநபரை விடுதலை செய்வதாக உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம)

## சரத் வீரசேகர என்பவர் இனவாத மனநோயாளி!

### செல்வம் எம்.பி. பதிலடி

மன்னார், ஜூன் 23

ஜனாதிபதி கோத்தாபயவின் அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்கள் தற்போது கடுங்கோபத்தில் உள்ளனர். அந்த மக்களின் கோபத்தைத் திசைதிருப்புவதற்காக இனவாதக் கருத்துக்களைப் பரப்பும் சரத் வீரசகர ஒரு மனநோயாளி என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

மன்னாரில் நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்திய பின்னர் நாடாளுமன்றத்தில் இனவாதக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் சரத் வீரசேகர. எங்களுடைய சொத்தான குருந்தூர்மலையில், பௌத்த விகாரை அமைக்கப் படுவதைத் தடுப்பது என்பது எமது உரிமை. தமிழர்களோ அல்லது தமிழர்களின் போராட்டமோ சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. இதை பல சந்தர்ப்பங்களில் நாம் வெளிப்படுத்தியுள்ளோம். ஆகவே சரத் வீரசேகர போன்றவர்கள் இனியும் இனவாதம் பேசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்

எங்களுடைய தேசத்தில் எங்களுடைய மக்களின் பிரச்சினைகளை, எங்களுடைய வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை, அணு அளவுகூட விட்டுக்கொடுக்க மாட்டோம்.

சரத் வீரசேகர கூறிய கருத்தை மீண்டும் அவருக்கு நான் கூறுகிறேன். சிங்கள மக்களை நீங்கள் சீண்டிப் பார்க்காதீர்கள். சிங்கள மக்கள் ஒரு போதும் உங்களுடைய பக்கம் வரமாட்டார்கள். சிங்கள மக்கள் கோபம் கொண்டால் சரத் வீரசேகர போன்றவர்கள் தாங்க மாட்டார்கள் -என்றார். (ம-213)

## சிங்கள மக்களுடைய அமைதி தெருவில் இறங்கினால் தெரியும்

### சரத் வீரசேகரவுக்கு சுரேந்திரன் பதில்

யாழ்ப்பாணம், ஜூன் 23

சரத் வீரசேகர பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து துரத்தி அடிக்கப்பட்டது சிங்கள மக்கள் அமைதியாக இருந்ததால்தானோ? சிங்கள மக்களின் அமைதியைக் குலைத்தது தமிழர்கள் அல்ல, சிங்கள பௌத்த வேடதாரிகளே என அந்த மக்களே தெளிவாக கூறியுள்ளனர்.

இவ்வாறு ரெலோ கட்சி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சி அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

தாங்கள் தெருவில் இறங்கி சிங்கள மக்களுடன் சகஜமாக உரையாட முடியுமா? அவர்களின் அமைதியைக் குலைத்தது நீங்கள்தான். அவர்கள் பொறுமையை தமிழ்மக்கள் சோதிக்கவில்லை. மதவாதத்தின் பின்னால் ஒளிந்துகொண்டு பூச்சாண்டி காட்டுபவர்களுக்கு இனி மக்கள் மசிய மாட்டார்கள்.

குருந்தூர்மலை புராதன தமிழர் பிரதேசம். அந்தப் பிரதேச மக்களின் காணிகளை அபகரித்து, நீதிமன்ற உத்தரவையும் மீறி, நாடு பெரும் பொருளாதார சிக்கலை எதிர் கொண்டிருக்கும் வேளையில் புத்தர்சிலை அமைப்பதற்கான அவசியம் என்ன? தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து நமது இன குடிப்பரம்பலை சிதைத்து நமது தாயகக் கோட்பாட்டை மழுங்கடிக்கும் இன அழிப்பு நடவடிக்கையே இதுவாகும் -என்றுள்ளது. (ம)

## 21 ஆம் திருத்தத்தை ஆதரிக்கவேண்டும்!

### எதிர்க்கட்சிகளிடம் நீதி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 23

21ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

21ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு சில பரிந்துரைகளை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்தது.

ஆனால், அந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் சிலவற்றுக்கு பொதுமக்கள் வாக்கெடுப்பும் தேவை என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்தப் பின்னணியிலேயே அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று நீதி அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டவற்றில், வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றக்கூடிய அனைத்து சரத்துக்களையும் 21ஆவது திருத்தத்தில் இணைத்துள்ளதாகவும் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்காக்கும் மருந்துகளின் கையிருப்புத் தீர்ந்தது!

## அரச மருத்துவ அதிகாரிகள் மீண்டும் மீண்டும் அபாய ஒலி

GMOA

**கொழும்பு, ஜூன் 23**

**அத்தியாவசிய மற்றும் உயிர்காக்கும் மருந்துகளின் கையிருப்பு முற்றாகத் தீர்ந்துள்ளது. நாடு பெரும் சுகாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே சங்கத்தின் உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது சில அரச மருத்துவமனைகளில் குறைந்த எண்ணிக்கையிலான மருந்துகள் மட்டுமே உள்ளன. ஏனையவற்றின் கையிருப்பு வேகமாக தீர்ந்து வருகின்றது. இந்தப் பிரச்சினையை பல தனிநபர்களும் அமைப்பினரும் பல சந்தர்ப்பங்களில் ஊடகங்களில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இவ்விடயம் குறித்து நிபுணர்கள் கவலைப்படும் நிலையில், அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் தம்மிடம் இருப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவிக்கின்றார்.

சுகாதார அமைச்சர் கூறியது உண்மையாக இருந்தால், தற்போது விநியோகப் பிரச்சினை இருக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

நாடு முழுவதும் உள்ள அந்தந்த மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துத் தொகுதிகள் வழங்கப்படுவதை உறுதிசெய்வது சுகாதார அமைச்சரின் பொறுப்பாகும்.

தேசிய கண் மருத்துவமனையில் ஒரேயொரு நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து மட்டுமே இருக்கின்றது. வேறு மாற்று மருந்துகளை வழங்க முடியாத நிலையில் ஊழியர்கள் உள்ளனர். கையிருப்பு இல்லாத, குறைவாக உள்ள அல்லது வேகமாக தீர்ந்துகொண்டிருக்கும் மருந்துகளின் பட்டியல் எங்களிடம் உள்ளன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (ம)

## இலங்கைக்குப் போர்க்கால உதவி: இந்திய நிபுணர்கள் விரைகின்றனர்!

கொழும்பு, ஜூன் 23

இந்தியாவிலிருந்து விசேட பிரதிநிதிகள் குழுவொன்று இன்று அவசர பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொருளாதார ஆலோசகர் வி.ஆனந்தநாகேஸ்வரன் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று இலங்கைக்கு மேலும் உதவிகளை வழங்குவது தொடர்பில் இலங்கை நிலவரத்தை ஆராய்வதற்காகவே இவ்வாறு வரவுள்ளது.

இலங்கைக்கான மூன்று மணிநேர பயணத்தின் போது அவர்கள் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திக்கவுள்ளனர். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் இந்திய நிதியமைச்சருடன் மேற்கொண்ட பேச்சுக்களைத் தொடர்ந்தே இந்தக் குழு இலங்கைக்கு வரவுள்ளது என்று மேலும் தெரியவருகின்றது. (ம)



## அடுத்த வருடம் நடுப்பகுதி வரை

# மருந்துகளுக்கு தட்டுப்பாடில்லை

### சுகாதார அமைச்சர் முரண் கருத்து

கொழும்பு, ஜூன் 23

உயிர்காக்கும் மருத்துகளின் இருப்பு முற்றாகத் தீர்ந்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், அடுத்த வருடத்தின் நடுப்பகுதி வரை மருந்துகளுக்குத் தட்டுபாடு ஏற்படாது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மருந்து கொள்வனவுக்காக வருடாந்தம் 200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படுகின்றது. தற்போது வரையில் 439 மில்லியன் அமெரிக்க டொலரை பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகள் மருந்துகொள்வனவுக்காக இலங்கைக்கு வழங்கியுள்ளன. இதற்கு மேலதிகமாக சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய பொருள் கொள்வனவுக்காக அவுஸ்திரேலியா 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கவுள்ளது. இதன் படி, மருந்து கொள்வனவுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கையிருப்பில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, அடுத்த வருடம் நடுப்பகுதி வரையில் மருந்துப் பொருள்களுக்கு தட்டுபாடு ஏற்படாது -என்றார். (ம)

# மத்திய வங்கிக்கு வீரசிங்கவே ஆளுநர்

### ஜனாதிபதி விடாப்பிடி

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி நந்தலால் வீரசிங்கவே தொடர்வார் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆளும் பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான கூட்டமொன்றில், நந்தலால் வீரசிங்கவை மத்திய வங்கியின் ஆளுநராகத் தொடர்ந்தும் வைத்திருக்குமாறு பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)




**மூக்கிருக்கும் மட்டும் சளி இருக்கும் எண்ட மாதிமரி, நாட்டில ஒழுங்கான ஆட்சி வரும் வரைக்கும் உந்தப் பெற்றோல் புராணம் ஓயாமல் இருக்கும்போல. நெடுக கியூவில நிக்கிறதால கனபேருக்கு மனரீதியா கடும் அழுத்தம். அந்த அழுத்தம் கூடிக்கொண்டு போகேக்க, கடைசியில அது கலவரத்தில தான் முடியும். பெற்றோல் செற்றுகளில பொலிஸ்காரர் செய்யிற தில்லாலங்கடி வேலையளைப்பற்றி நேற்றைய 'புதினம் தெரியுமோ?'வில பட்சி சொல்லியிருந்திச்சு. இண்டைக்கு செற்றுகளில நடந்த வேற சில சம்பவங்களைச் சொல்ல வேணும்.**

**துணுக்காயில உள்ள பெற்றோல் செற் ஒண்டில, 'பெற்றோல் இல்லை' எண்டு போர்ட் ஒண்டை கொழுவிப் போட்டு, முன்னுக்கு சென்றி மாதிரி தடுப்புகளும் போட்டிட்டு இருந்தவை. அந்தநேரம் ஒரு கர்ப்பிணிப் பிள்ளை ஒண்டு செற்றுக்கு வந்து 'அண்ணை, கிளினிக்குக்கு போக பைக்கில பெற்றோல் இல்லை. ஒரு அரை லீற்றராவது தரமாட்டீங்களோ?' எண்டு கேட்டிருக்கிறா. 'இல்லையக்கா, இருந்தால் தரமாட்டமோ? நீங்கள் பவுஸர் வந்த பிறகு வாங்கோ. இப்ப இல்லை' எண்டு சொல்லி திருப்பி விட்டிட்டினம். பாவம், அந்தக் கர்ப்பிணியும் பெற்றோல் கிடைக்காமல் கிளினிக்குக் கூட போகாமல், வீட்டை திரும்பிப் போட்டா.**

**அதேமாதிரி, இன்னொரு ஆளும் வந்திருக்கிறார். அவர் சுண்டல் விக்கிறவர். ஒரு கால் ஏலாது. அப்பிடியிருந்தும், தன்னால முடிஞ்ச சுண்டல் விக்கிற வேலையைச் செய்து வந்தவருக்கு இப்ப பெற்றோல் இல்லாததால், மூண்டு சில்லு மோட்டர் சைக்கிளில போய்வர முடியாத நிலை. தொழிலுக்குப் போறதுக்கு கொஞ்சம் பெற்றோல் தாங்கோ எண்டு அந்தக் கால் ஏலாதவர் கேட்டும், செற்றில இல்லையெண்டு சொல்லிப் போட்டினம். இப்பிடி அவசர தேவைக்காக வாறவையைக் கூட திருப்பி அனுப்பிக் கொண்டிருந்த அந்த செற்றில, ஒரு லொறி வந்து நிண்டிருக்கு. அதுக்குள்ள இருந்த பரல்களுக்குள்ள மளமளவெண்டு பெற்றோல் அடிபட்டிருக்கு. கர்ப்பிணி கிளினிக் போறதுக்கும், கால் ஏலாதவர் சுண்டல் விக்க போறதுக்கும் இல்லாமற் போன பெற்றோல் எப்பிடி லொறியைக் கண்டவுடன மட்டும் ஊற்றெடுத்தது எண்டு ஒருத்தருக்கும் விளங்கேலை.**

**ஏற்கனவே கொதிப்பில இருந்த சனம், இப்பிடி லொறியைக் கொண்டந்து பரல் கணக்கில பெற்றோல் அடிக்கிறதை படம் எடுத்து, அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பிப் போட்டினம். அது சம்பந்தமா மேல்மட்ட அதிகாரியள் உடனேயே விசாரணையைத் தொடங்கியிருக்கினம். அதுக்கு 'சங்கத்தில வேலை செய்யிற ஆக்களுக்கு குடுக்கத்தான் பரலில பெற்றோல் அடிச்சனாங்கள்' எண்டு முதல் சொல்லியிருக்கினம். பிறகு 'பிரதேச செயலகத்தில வேலை செய்யிறவைக்கும் சேர்த்துக் குடுக்கத்தான், அவைக்கும் சொல்லிப் போட்டு அடிச்சம்' எண்டு இன்னொரு மாதிரியும் சொல்லியிருக்கினம். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு இப்பிடி பரலில அடிக்கிறதோ, பிரதேச செயலாளரின்ர அனுமதி இல்லாமல் பெற்றோல் குடுக்கிறதோ நடக்கக் கூடாது எண்டு செற்காரர்களுக்கு ஓர்டர் போயிருக்கு.**

**என்ன சட்டம் போட்டாலும் அதைத் திட்டம் போட்டு மீறுற ஆக்கள் இருக்கிறவரைக்கும் குழப்பங்களுக்கு குறைவிருக்காது.**



\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்துகளுக்கு இனி சீரான எரிபொருள் விநியோகம்

## யாழ். மாவட்ட செயலர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்.மாவட்ட தனியார் பேருந்துகளுக்கான எரிபொருள் விநியோகம் இன்றுமுதல் சீரான முறையில் விநியோகிக்கப்படும் என யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து சங்க பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளுக்கான எரிபொருள் இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலைக்கு எரிபொருள் கிடைக்கப்பெறாமையால் தனியார் பேருந்துகளுக்கு டீசல் வழங்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்தப் பின்னணியிலேயே மேற்படி சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

# நெருக்கடி நேர்ந்தாலும் எமது சேவை தொடரும்



## தனியார் பேருந்து சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

**யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் நெருக்கடி காரணமாக தனியார் பேருந்துகளில் 50 சதவீதமான பேருந்துகளே சேவையில் ஈடுபட்டாலும் சேவைகளை முற்றாக ஒருபோதும் நிறுத்தமாட்டோம் என யாழ். மாவட்ட பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் பொன்னுத்துரை கெங்காதரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் தனியார் பேருந்துகளுக்குரிய எரிபொருள் பிரச்சினை தொடர்பில் நேற்று சங்க அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோண்டாவில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போவில் எமக்குரிய எரிபொருளை பெறுவதற்கு சாரதிகள் நீண்டவரிசையில் காத்திருந்தபோது இலங்கை போக்குவரத்து சபையினருக்கும் தனியார் பேருந்து சங்கத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு வந்த கோப்பாய் பொலிஸார் இரு தரப்பு பிரச்சினைகளையும் கேட்டறியாது எமது சங்க உறுப்பினர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து எமது சங்கம் பணிப்புறக்கணிப்பு செய்ய முற்பட்டவேளை யாழ்.மாவட்டச் செயலருடன் நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற பேச்சில் எட்டப்பட்ட தீர்வுக்கமைய பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பணிப்புறக்கணிப்புக் கைவிடப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 17 தனியார் பேருந்து சங்கங்கள் காணப்படுகின்ற நிலையில் காரைநகர் இலங்கை போக்குவரத்து சாலையில் மூன்று சங்கங்களுக்கும், பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சாலையில் நான்கு சங்கங்களுக்கும் கோண்டாவில் இலங்கை போக்குவரத்து சாலையில் எட்டு சங்கங்களுக்குமென மொத்தமாக 17 சங்கங்களுக்கு டீசல் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இவ்வாறு டீசல் பகிர்ந்தளிக்கப்பட்டாலும் தனியார் பேருந்து சேவைகள் எரிபொருள் தட்டுப்பாட்டையே எதிர்கொள்கின்றன.

ஆகவே யாழ் மாவட்ட தனியார் பேருந்து சங்கத்தின் சார்பாக எமக்குரிய ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தருமாறு யாழ். மாவட்டச் செயலருக்கு கோரிக்கை விடுத்தோம்.

இது தொடர்பில் யாழ். மாநகர ஆணையாளருக்கு மாவட்டச் செயலர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். விரைவில் எக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையம் கிடைக்கும் என நம்புகிறோம். பொதுமக்களின் நன்மை கருதி எமது சேவையை இடைநிறுத்தாது மேற்கொண்டு வருகின்றோம். எதிர்வரும் காலங்களிலும் மக்களுக்கு எமது சேவைகளை வழங்குவோம் - என்றார். (ச-125)

# மோட்டர் திருடினரென இரு இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 23

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருவேறு இடங்களில் மோட்டர் திருடிய குற்றச்சாட்டில் இருவரை வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக குறித்த பகுதியில் மோட்டர்கள் திருடப்படுகின்றன என மக்கள் அளித்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையிலேயே அதே பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அத்துடன் அவர்களிடமிருந்து திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த இளைஞர்களுக்கு எதிராக இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே வழக்கொன்று பதிவாகியுள்ளது. சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# வவுனியாவில் கிணற்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாநகர் பகுதியிலுள்ள தனியார் வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளரான அழகர்சாமி விஜயகுமார் (வயது-50) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் நேற்றுமுன்தினம் மாலை வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் நேற்று கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறப்புத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-18)



# எரிபொருள் நெருக்கடிக்குள்ளும் சீரான குடிதண்ணீர் விநியோகம்

## கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 23

எரிபொருள் நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலும் குடிதண்ணீர் விநியோகம் மற்றும் கழிவு அகற்றல் வேலைத்திட்டம் என்பன சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன என்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களில் முல்லைத்தீவு நகரம் உட்பட குடிதண்ணீர் தேவைப்படுகின்ற அனைத்து இடங்களுக்கும் குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எதிர்வரும் மாதங்களில் கூடுதலான குடிதண்ணீர் தேவைப்படும் கிராமங்களுக்கு விநியோகம் மேற்கொள்வதற்கான திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதற்காக ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். நான்கு உழவு இயந்திரங்கள் பாதுகாப்பான கழிவகற்றலுக்காக பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய பிரதேச சபைகளில் காணப்படுகின்ற நவீன கழிவு அகற்றல் வாகனம் எமது பிரதேசசபைக்கும் எதிர்காலத்தில் கிடைக்கவேண்டும் -என்றார். (ய-13)

# மக்களுக்கு இல்லையென்ற பெற்றோல் பரல்களில் எவ்வாறு நிரப்பப்படுகிறது?

## மல்லாவி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் குழப்பம்



முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பும் நிலையமான மல்லாவி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பொதுமக்களுக்குப் பெற்றோல் இல்லை என்று தெரிவித்துவிட்டு, துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்க பாரவூர்தி ஒன்றில் கொண்டு வரப்பட்ட இரு பரல்களில் நேற்றுக் காலை பெற்றோல் நிரப்பியபோது பாரவூர்தியை மக்கள் முற்றுகையிட்டுக் குழப்பம் விளைவித்தனர்.

குறித்த சம்பவத்தால் அந்த பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதையடுத்து பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். மக்கள் தொடர்ந்தும் முரண்பட்டதை அடுத்து எரிபொருளை ஏற்றிய பாரவூர்தி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு [illegible] எரிபொருள் நிரப்பு நிலை[illegible] கத்தினர் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர்.

இரு பரல்களிலும் உள்ள பெற்றோல் இன்று பிரதேச செயலர் மற்றும் பொலிஸார் ஆகியோர் முன்னிலையில் அத்தியாவசிய சேவைப் [illegible] வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோல் பவுஸருக்கு நெல்லியடியில் தேங்காய் உடைத்துப் பெரும் வரவேற்பு



யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சி, நெல்லியடியில் பெற்றோலுக்காகக் காத்திருந்த மக்கள் பெற்றோல் தாங்கி வாகனத்தை தேங்காய் உடைத்து, ஆரவாரம் செய்து வரவேற்றுள்ளனர்.

தற்போது நாடு முழுவதும் பெற்றோல் மற்றும் டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

பெற்றோல், டீசல் பெறுவதற்காக பகல் வேளைகளில் வரிசைகளில் காத்திருந்து எரிபொருள் பெறமுடியாத நிலையில், தற்போது இரவிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் காத்திருக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் பெற்றோலுக்காக நெல்லியடியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் வரிசைகளில் காத்திருந்த மக்கள், நீண்ட நேரத்தின் பின்னர் வந்த பெற்றோல் தாங்கி வாகனத்தைக் கண்டு குதூகலமடைந்தனர். மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததுடன், வீதியில் மக்கள் தேங்காய் உடைத்து வாகனத்தை வரவேற்றனர். (எ-இ)

### நகர்ப்புற ஆசிரியர்களின் வரவின்மை

# கிராமப்புற மாணவர்கள் கல்வியிழக்கும் ஆபத்து

வவுனியா, ஜூன் 23

**வவுனியாவிலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளுக்கு எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நெருக்கடி காரணமாக நகர்ப் பகுதிகளிலிருந்து வருகை தரும் ஆசிரியர்களின் வரவு குறைவடைந்துள்ளது. இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் கல்வியிழக்கும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது என்று வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகரப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை 'சூம்' செயலி ஊடாக நடத்துமாறும் கிராமப்புறப் பாடசாலைகளை தொடர்ந்து இயக்குமாறும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. எனினும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய நகர்ப்பகுதிகளிலிருந்து கிராமப்புற பாடசாலைகளுக்குக் கற்பிப்பதற்கு வருகை தரும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற பாடசாலைகளில் சூம் செயலி கல்வி முறைமை மேற்கொள்ள முடியாத சூழல் காணப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் நேரடியாகச் சென்று கல்வி கற்பிக்க வேண்டிய தேவையுள்ளது.

அத்துடன் கிராமப்புற மாணவர்கள் பாடசாலைக் கல்வியை மாத்திரமே நம்பியுள்ளனர்.

ஆகவே கிராமப்புற மாணவர்கள் கல்வி இழக்காதிருக்க வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் நகர்ப்புற ஆசிரியர்களின் எரிபொருள் பிரச்சினையைக் கவனத்திலெடுத்து கிராமப்புற பாடசாலைகளுக்குச் சென்று கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க அவர்களுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச)

### எரிபொருள் நெருக்கடி

## வரிசையில் நின்றோருக்கு குளிர்பானம் விநியோகம்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், வரிசையில் நின்ற பொதுமக்களுக்கு குளிர்பானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. எரிபொருளைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். இந்த நிலையிலேயே மக்களின் தாகத்தைப் போக்கும் வகையில் எரிபொருள் வரிசையில் நின்ற பொதுமக்களுக்கு தன்னார்வலர்களால் குளிர்பானங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-17)

## வீதி அபிவிருத்தி அதிகார சபையில் 'டீசல்' திருட்டு

கொழும்பு, ஜூன் 23

பலாங்கொடையிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகத்தில் ஆயிரத்து 500 லீற்றர் டீசல் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது கைதானவரிடமிருந்து திருடப்பட்ட 600 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## மாந்தை கிழக்கு மாணவரின் போக்குவரத்தைச் சரிசெய்க!

### பெற்றோர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள், பாடசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்தில் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர். இதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் ஆக்கபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், மாந்தை கிழக்கு நட்டாங்கண்டலிலிருந்து காலையில் மாணவர்கள் தனியார் பேருந்து மூலம் சிரமங்களுக்கு மத்தியில் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். பாடசாலை முடிவடைந்ததும் மாணவர்கள் வீடு திரும்பக்கூடிய போக்குவரத்து சேவை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெறுவதில்லை.

இதுதொடர்பில் மாந்தை கிழக்கு கோட்டம், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகம், துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை, முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் பலமுறை முறைப்பாடுகள் செய்தும் இது தொடர்பில் எவரும் எந்தவித தீர்வையும் மேற்கொள்ளவில்லை.

ஆகவே மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடியை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கவனத்திலெடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவேண்டும்- என்றனர். (ச-13)

## பதுக்கப்பட்ட எரிபொருள் எதிர்ப்பால் பகிர்ந்தளிப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 23

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 150 லீற்றர் பெற்றோல் மக்களின் எதிர்ப்பையடுத்துப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.



சண்டிலிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக பெற்றோல் விநியோகிக்கப்படாமையால் மக்கள் இரவு பகலாக நித்திரையின்றி 782 வழித்தடத்தில் வாகனங்களை நிறுத்தி காத்திருந்தனர். எனினும் பல நாள்களாகியும் எரிபொருள் விநியோகிக்கப்படாமையால் ஏமாற்றமடைந்த மக்கள் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் தாங்கிகளை சோதனைக்குட்படுத்தவேண்டும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் தலைமையில் அதிகாரிகள் எரிபொருள் நிலைய தாங்கிகளை சோதனைக்கு உட்படுத்தியவேளை ஆயிரத்து 150 லீற்றர் பெற்றோல் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

அத்தியாவசிய சேவைக்காக 300 லீற்றர் பெற்றோலை கையிருப்பில் வைத்துக் கொண்டு ஏனைய 850 லீற்றரை விநியோகிக்குமாறு பிரதேசசெயலக அதிகாரிகளால் பணிக்கப்பட்டதையடுத்து மக்களுக்கு எரிபொருள் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ச-125)

### எரிபொருள் வரிசையில்

## வெயிலில் காத்திருப்போருக்கு நீராகாரங்களை வழங்குங்கள்

### வடமாகாண ஆளுநர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

எரிபொருளுக்காக வெயிலில் பல மணிநேரமாக நீண்டவரிசையில் காத்திருக்கும் மக்களின் தண்ணீர் தாகத்தைப் போக்க உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இயன்றவரை உதவ வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போதைய பெரும் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலவுகின்றது. வடக்கு மாகாணத்தில் மக்கள் மணிக்கணக்கில் வெயிலில் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். இதனால் பல நோய்த்தாக்கங்களுக்கும் மக்கள் உள்ளாகின்றனர்.

இந்த அவலநிலையைக் கருத்திற்கொண்டு இயன்றவரை எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு சமூக மட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், தற்போதைய தருணத்தில் நீராகாரங்களை வழங்கி உதவவேண்டும்.

அத்துடன் வடமாகாண பிரதம செயலாளர் ஊடாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிரதேச செயலகங்களும் இதற்குரிய நடவடிக்கையை உடன் மேற் கொள்ள வேண்டும் - என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னேரிக்குளம் - பாலாவி வீதியை சீரமைத்துத் தருக

## மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி, ஜூன் 23

**கிளிநொச்சி மேற்கின் முதன்மை வீதியான வன்னேரிக்குளம்- பாலாவி வீதி புனரமைப்பு இழுபறி நிலையில் காணப்படுவதால் அந்த வீதியூடாகப் போக்குவரத்தை மேற்கொள்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:- 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் முல்லைத்தீவு திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன்வரை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் வீதிப் புனரமைப்புகள் முதற்கட்டமாக நடைபெற்றன. இரண்டாம் கட்டப் பணிகள் 2021 ஆம் ஆண்டில் அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, வேரவில், பாலாவி வரை தொடங்கப்பட்டன.

எனினும் அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் வரையான வீதி புனரமைக்கப்பட்ட நிலையில் வன்னேரிக்குளத்திலிருந்து பல்லவராயன்கட்டு - பாலாவி வரையான வீதி வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் கிளிநொச்சி மேற்கு, வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பாலாவி ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். அவசர நோயாளிகளைக்கூட முழங்காவில் மற்றும் கிளிநொச்சி மருத்துவமனைகளுக்கு வேகமாகக் கொண்டுசென்று சேர்க்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

குறித்த வீதியை புனரமைத்துத் தரும்படி மூன்று மாதங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டபோது ஏப்ரல் மாதத்தில் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. எனினும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டு இரு மாதங்கள் கடந்த நிலையில் எவ்வித புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களின் போக்குவரத்து அவலத்தை கவனத்திலெடுத்து வீதியைச் சீரமைத்துத் தரவேண்டும் - என்றனர். (ச-13)



## பனிக்கர்புளியங்குளம் பகுதியில் தண்ணீருக்கான இடர்பாடு தீர்ப்பு

வவுனியா, ஜூன் 23

ஓமந்தை - பனிக்கர்புளியங்குளம் பகுதியில் சமூக அமைப்பொன்றின் நிதி பங்களிப்பில் பொதுக்குழாய்க் கிணறு பொதுமக்களின் குடிதண்ணீர்ப் பாவனைக்காக நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

மேற்குறித்த கிராமத்தில் நீண்டகாலமாக மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்த நிலையில், இந்தக் குடிதண்ணீர் திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (ய)



## மன்னாரில் 100 வயதை எட்டிய முதியவர் கௌரவிப்பு

மன்னார், ஜூன் 23

மன்னாரில் 100 வயதை எட்டிய முதியவர் ஒருவரை மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் மற்றும் அதிகாரிகள் நேரில் சென்று நேற்று முன்தினம் கௌரவித்தனர்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சாளம்பன் கிராமத்தை சேர்ந்த மனுவேல் சந்தான் என்ற முதியவரே 100 வயதை எட்டியுள்ளார். இவர் நான்கு மகள்கள், இரண்டு மகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப்பிள்ளைகள் என 49 குடும்ப உறுப்பினர்களைக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் மாவட்டச் செயலர் உட்பட மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் அவரது வீட்டுக்குச் சென்று முதியவரை கௌரவித்து ஆசிபெற்றனர். (ச-60)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன். 23

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, நாட்டு மக்களுக்கு சுபீட்சமானதொரு வாழ்வு வேண்டி, இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் துன்னாலை இந்திரன் கண்ணகை அம்மன் கோயிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சி.இந்திரராஜக் குருக்களின் அருளாசியுரையும், வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ய)



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பொங்கலின்போது, இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை மற்றும் தாகசாந்தி நிகழ்வு ஆகியவை இடம்பெற்றன. இதன்போது ஆலயத்துக்கு வருகைதந்த பக்தர்கள் வங்கிச் சேவைகளை பெற்றுக் கொண்டனர். அத்துடன் ஆலய வளாகத்தில் இலங்கை வங்கியால் அமைக்கப்பட்ட தாகசாந்தி நிலையத்திலும் பக்தர்களுக்கு குளிர்பானங்கள் மற்றும் தேநீர் வழங்கப்பட்டன. (ச)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன என்று ஆலய தேவஸ்தான சபையினர் அறிவித்துள்ளனர். (ம-14)

## காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும்

கொழும்பு, ஜூன் 23

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் எனவும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-35 கிலோமீற்றர்வரை காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் உள்ளதாவது:-

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேலும் சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளுமாறும் காற்றின் வேகம் அதிகமுள்ள பகுதிகளில் மீனவர்கள் கடற்பகுதிக்குச் செல்வதை தவிர்க்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது - என்றுள்ளது. (ச-இ)



நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் "பசுமை நாடு - ஆரோக்கியமான நாளை" எனும் தொனிப்பொருளில், வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான பயிற்சி வகுப்பும் மரக்கறி விதைகள் வழங்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை மறவன்புலவு ஜே/298 கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்றது. (ம-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கோத்தாபயவின் இறுதி அஸ்திரம்

சிறிலங்காவின் முதற்தரக் கோடீஸ்வரரான தம்மிக்க பெரேரா, பொதுஜன பெரமுனவின் எம்.பியாக நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். ராஜபக்ச குடும்பத்தில் 'ஏழு மூளைகள்' கொண்டவர் என்று வர்ணிக்கப்பட்ட பஸில் ராஜபக்ச பதவி விலகியதால் உண்டான தேசியப்பட்டியல் இடத்துக்கே தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

'நான் தோற்றுப்போன ஜனாதிபதியாகப் பதவி விலக மாட்டேன்' என்று சபதம் செய்துள்ள கோத்தாபய ராஜபக்ச, இறுதி யாக தன்னைக் காத்துக்கொள்ளக் கையில் எடுத்துள்ள அஸ்திரமே தம்மிக்க பெரேரா என்று நம்பப்படுகின்றது. ஏனெனில் தம்மிக்கவுக்கு சர்வதேச வர்த்தகர்களிடம் செல்வாக்கு உள்ளது. அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி, கடனடிப்படையில் நாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யவும், டொலர் வருகையை அதிகப்படுத்தவும் முடியுமென கோத்தாபய நம்புகிறார். அவ்வாறு தம்மிக்கவின் புண்ணியத்தில் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் முன்னரைப் போல சிறிலங்காவுக்கு தாராளாமாகக் கிடைத்து, டொலர்க் கையிருப்பும் உயர்ந்தால் 'கோத்தா கோ' என்ற கோஷம் காணாமல் போய்விடும். அதனால் தன் பதவிக்காலம் முடியும் வரை எந்தவிதப் பயமுமில்லாமல் ஆட்சிக்கதிரையில் அமரலாம் என்பது கோத்தாபயவின் திட்டம். அதனாலேயே தன் சகோதரர் பஸில் ராஜபக்ச எதிர்ப்புத் தெரிவித்தபோதும், அதை அலட்சியப் படுத்திவிட்டு தம்மிக்கவை எம்.பியாக்கி அழகுபார்த்துள்ளார் கோத்தாபய.

ஆனால் எல்லோரும் நினைத்தபடி காரியங்கள் நடப்பதில்லையே. இப்படித்தான் பொருளாதார நெருக்கடி சிறிலங்காவுக்குள் தன் காலடியைப் பதித்தபோது, அதனைச் சமாளிக்க 'ஏழு மூளைகள்' கொண்ட அசகாய சூரரான பஸிலால் மட்டுமே முடியுமென்று அரசாங்கத்தில் உள்ள பலரும் நம்பினர். பஸிலின் வருகையை எதிர்த்த விமல், உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். அமெரிக்காவில் இருந்த பஸில் வரவழைக்கப்பட்டு, தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்கப்பட்டு, அப்படியே நிதியமைச்சும் அவர் கையில் ஒப்படைக்கப்பட்டது. 'இனி சிறிலங்காவில் பாலாறும் தேனாறும் ஓடப்போகிறது. பஸில் சமர்ப்பிக்கப்போகும் பட்ஜெட் நாட்டு மக்களுக்கு பெரும் இன்ப அதிர்ச்சியைக் கொடுக்கும்' என்றெல்லாம் ஏகப்பட்ட சோடிப்புகள் செய்யப்பட்டன.

ஆனால் நடந்ததென்ன? மத்திய வங்கியில் பஸிலும், அஜித் நிவாட் கப்ராலும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் நாணயத்தாள்களை அச்சிட்டதைத் தவிர வேறெதுவும் கிழிக்கவேயில்லை. இந்தக் கண்மூடித்தனமான நாணய அச்சடிப்பால், ரூபாவின் பெறுமதி படுபாதாளத்துக்குள் வீழ்ந்தது. டொலர் கையிருப்பு இல்லாமலேயே போனது. அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யக்கூட இயலாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது. வெளிநாட்டுக் கடன்களைக் கட்டமுடியாமல் நாடு 'திவாலானது'. வரிசையுகம் உருவானது. அதன் விளைவாக ஒட்டுமொத்த நாடுமே கொந்தளித்து, 'கோத்தா கோ கோம்' என்ற கோஷத்துடனான போராட்டங்கள் பரவலாக வெடித்தன. காலிமுகத்திடலில் 'கோத்தா கோ கம' என்ற போராட்டக்கிராமமே உருவெடுக்குமளவுக்கு இந்தப் போராட்டங்கள் விஸ்வரூபமெடுத்தன. இதன் விளைவாக மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியை கைவிடவேண்டிய நிர்ப்பந்தத்தை காலம் உண்டாக்கியது. அவருக்குப் பதிலாக அடுத்த பிரதமராக யாரைக் கொண்டுவருவது என்று எல்லோரும் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கினார் கோத்தாபய.

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடனும், அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுடனும் ரணிலுக்கு நல்லுறவு இருப்பதால் அதனைப் பயன்படுத்தி சர்வதேச உதவிகளைப் பெற்று, நெருக்கடியைத் தீர்க்கலாம் என்பதே கோத்தாபய, ரணிலைப் பிரதமர் பதவியில் இருத்தியமைக்குச் சொன்ன காரணமாக இருந்தது. ஆனால் பஸிலை விட எந்தவகையிலும் 'குறைந்தவரல்லர்' என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார் ரணில். வரிசை யுகம் இன்னும் நீள்கிறது. பொருள்களின் விலைகள் முன்னரைக் காட்டிலும் எகிறுகின்றன. பஸிலைப் போலவே ரணிலும் நாணயத்தாள்களை அச்சிடத் தொடங்கிவிட்டார். ரணிலாலும் இந்த நாட்டை நிமிர்த்த முடியாது என்று புரிந்த பின்னர்தான் இப்போது மூன்றாவதாக தம்மிக்கவைக் கொண்டுவந்துள்ளார் கோத்தாபய.

பஸில், ரணில் என்ற இரு அஸ்திரங்களும் தோற்றுப்போன நிலையில், தம்மிக்கவாவது கோத்தாவுக்கு கைகொடுப்பாரா? அல்லது முன்னவர்களின் வழியில் இந்த நாட்டை இன்னும் நாசமாக்குவதைத்தான் தம்மிக்கவும் தன்பணியாகக் கொள்வாரா என்பது இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்.

நாளொரு நல்வார்த்தை

"நம்பிக்கை இருக்குமிடத்தில் வெற்றி உண்டாகும். அந்த நம்பிக்கையின் அடிப்படை இலக்கணம் விடாமுயற்சி."

- மகாகவி பாரதியார்

யோகா தினம்




# ஜே.வி.பி.யுடன் இணைந்து சஜித் அரசமைக்கத் திட்டம்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



**கொழும்பு, ஜுன் 23**

**ஜே.வி.பி.யை இணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ திட்டமிட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

சுயேச்சைக் கட்சிகளின் 11 தலைவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் பிளவுபட்டால் இந்த அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த வாசுதேவ நாணயக்கார. மேலும் தெரிவிக்கையில்;

"ஜனாதிபதியும் பிரதமரும் தற்போதைக்கு பிளவுபடவில்லை. பேச்சு நடந்து வருகிறது. ரணிலின் பதவி பறிபோகும் என்று வதந்திகள் பரவி வருகின்றன. ஆனால், ஜே.வி.பியுடன் இணைந்து சஜித் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முயற்சிப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. அவர் பிரதமராக விரும்புகின்றார். அவ்வாறு அனைத்துக்கட்சி அரசு அமைக்கப்பட வேண்டுமானால், அதன் கொள்கையும், நடவடிக்கையும் மட்டுமே எங்களுக்கு முக்கியம்" - என்றார். (ம)

# ரணிலின் கூட்டங்களில் இனி கலந்துகொள்ளேன்

## மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 23

பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமருடன் கலந்துரையாடியும் தீர்வு கிடைக்கவில்லை. ஆகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டங்களில் இனி ஒருபோதும் கலந்துகொள்ளப் போவதில்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசாங்கமானது அலங்கோலமான, கேவலமான, முட்டாள்தனமான, அயோக்கியத்தனமான அரசாங்கமேயாகும். ஒரே விடயத்துக்கு ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறாக அழைப்பு விடுத்து அதிகாரிகளுடன் கலந்துரையாடுகின்றனர். இவர்கள் முட்டாள் தனமான அரசாங்கத்தையே நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் மக்கள் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு இன்றி துன்பப்படுகின்றனர். மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர்கள் கஷ்டப்படுகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை கூட்டுங்கள்.

இல்லையென்றால் அங்கு பயிரிடப்படாத காணிகளை வழங்குங்கள். இது தொடர்பில் நான் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். அவரின் கூட்டத்துக்கும் சென்றுள்ளோம். இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. இனிமேல் ஒருபோதும் பிரதமரின் கூட்டத்துக்குச் செல்ல மாட்டோம். அது வெறும் ஏமாற்று வேலையே என்றார். (ம)

நாளை 24.06.2022 வெள்ளிக்கிழமை ஆனி 10

சுபநேரம் : 05.55 - 07.25
ராகுகாலம்: 10.25 -11.55

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயனி நவரத்தினம்
பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர்

# குடும்பங்களில் பெண் தலைமைகளும் பொருளாதார நலிவும்!



**இன்று சர்வதேச விதவைகள் தினமாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரம்.**

சர்வதேச விதவைகள் தினமானது 2005ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் உலகின் அனைத்து பாகங்களிலும் வாழும் விதவைகள் எதிர்கொள்ளும் வறுமை, பாரபட்சம், தங்கிவாழும் நிலையால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பவற்றினை வலியுறுத்துவதாகும். இவ்வருட சர்வதேச விதவைகள் தினத்துக்கான தொனிப்பொருளாக 'பொருளாதார மேம்பாட்டின் மூலம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை வலுப்படுத்தல்' என்பதாக அமைகின்றது. இத்தொனிப்பொருள் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கீட்டினால் பாதிக்கப்படும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

பாரம்பரிய ரீதியாகவும் புள்ளி விவர ரீதியாகவும் பெண்தலைமைத்துவக் குடும்பம் என்பது தனியே கணவனை இழந்த பெண்களுக்கு என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் கடந்த 30 வருடகால போர் மற்றும் நவீன மயமாதல் என்பவனவற்றின் காரணமாக கணவனின் இறப்புக்கு அப்பால் பல்வேறுபட்ட காரணங்களால் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை கணவனை இழந்த பெண்கள் மட்டுமல்லாது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்னும் பார்வையே கொள்கைகள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்களின் கரிசனைக்கு உட்படுகின்றன.

### வலிந்து ஏற்றப்படும் பெரும் சுமைகள்

குடும்பத்தலைவர் என்னும் வகிபாகம் ஆண்களுக்குரியது என்பது தென்னாசியாவில் மட்டுமன்றி இலங்கை சமூக கலாசார மற்றும் மரபு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வழக்காறு ஆகும். எனினும் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இத்தகைய நிலை கடந்த காலங்களில் மாற்றமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

முக்கியமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகரித்தமைக்கு பிரதான காரணங்களாக போர்ச் சூழல், உலகமயமாதலின் தாக்கம், மற்றும் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்ட புலம்பெயர்வுகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இதனால் பல்லாயிரக்கணக்கான பெண்கள் வழமையாக குடும்ப மற்றும் சமூக தளங்களில் ஆண்களால்தான் செய்ய முடியும் என்று எதிர்பார்த்த கடமைகளை செய்வதற்கு தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் அல்லது திணிப்பு ஏற்பட்டது. ஆண் ஒருவர் குடும்பத்தலைவராக இருத்தல் என்பது சமூக அந்தஸ்து அல்லது உரிமையாக கருதப்படும் அதேவேளை பெண்களுக்கு இத்தகைய நிலை இரட்டைச் சுமை அல்லது முச்சுமையாகவே கருதப்படுகின்றது. ஏனெனில் பெண்களுக்கு உரியது என்று கருதப்படும் வீட்டுவேலைகளுடன் வழமையாக எமது சமூகத்தில் ஆண்களுக்கு உரியது என எதிர்பார்க்கும் வெளிவேலைகளையும் குறிப்பாக வருமானமீட்டல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குப் பெண்களைத் தள்ளிவிடுகின்றது. இத்தகைய இரட்டைச்சுமைநிலையுடன் சமூக மற்றும் அரசியல் அநீதிகளுக்காக குரல்கொடுத்தல், போராடல் என்பவற்றுடன் சமூகமட்ட அமைப்புக்களின் செயற்பாடுகளில் பங்கெடுத்தல் என்ற முச்சுமையை பெண்கள் பொறுப்பெடுக்கவேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

### பெண் தலைமைத்துவ தோற்றத்துக்குக் காரணம்

பொதுவாக எமது சமூகத்தில் குடும்பத்துடன் கணவன் சேர்ந்து வாழாத நிலை அல்லது கணவனின் இறப்பு என்பவற்றின் பின்னரே பெண் தலைமைத்துவமானது உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இங்கு கணவன் சேர்ந்து வாழாத நிலையானது கணவனின் பிரிவு, விவாகரத்து, கணவன் வெளிநாட்டில் வசித்தல் என்பனவற்றுடன்; போர்காரணமாக தடுப்புமுகாமில் இருத்தல்; கணவன் காணாமல் போதல் என்பனவும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாவதற்கு காரணமாக அமைகின்றன. இவற்றுக்கு அப்பால் திருமணமாகாத பெண்கள் மற்றும் திருமணமாகாத தாய்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் என்ற வகைக்குள் தள்ளப்படுகின்றனர்.

சர்வதேச ரீதியில் 258 மில்லியன் விதவைகள் உள்ளார்கள். அவர்களில் பத்தில் ஒருவர் மிகவும் மேசமான வறுமையில் உள்ளதாகவும் 2021ஆம் ஆண்டில் நடைபெற்ற தென்னாசிய விதவைகள் தொடர்பான இணையவழி மாநாட்டின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. மற்றும் மகளிர்விவகார அமைச்சின் 2021ஆம் ஆண்டின் புள்ளிவிவரக் கையேட்டின் பிரகாரம் இலங்கையில் 1.4 மில்லியன் குடும்பங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்களாகும். இலங்கையில் 25 வீதமான குடும்பங்களாக பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. இவற்றில் 73 ஆயிரம் குடும்பங்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவை. பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகரித்தமைக்கான காரணங்களாக போர்கால சூழலில் பெண்களிலும் பார்க்க அதிகளவான ஆண்கள் இறந்தமை, காணாமல் ஆக்கப்பட்டமை, பாதுகாப்புக் காரணங்களால் ஆண்கள் வெளிநாடுகளுக்கு சென்றமை, எமது கலாசார மரபின்படி மனைவியை விட கணவன் கூடிய வயதுடையவராக உள்ளமை, இலங்கையில் பெண்களின் வாழ்க்கை எதிர்பார்ப்புக் காலமானது ஆண்களைவிட அதிகமாக உள்ளமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

### பொறுப்பும் கடமையும்

பொதுவாக பெண்தலைமைத்துவக் குடும்பம் ஒன்றில் பெண்கள் பின்வரும் பொறுப்புக்களை ஏற்கவேண்டிய நிலையில் உள்ளார்கள்.

- பெண்கள் குடும்பத்தில் முக்கிய வருமானமீட்டுபவர்களாக இருக்கவேண்டும்.
- பெண்கள் குடும்பத்தில் முக்கிய தீர்மானம் எடுப்பவர்களாக இருக்கவேண்டும்.
- பெண்கள் குடும்பத்தினை நாளாந்தம் நிர்வகிப்பவர்களாக இருக்கவேண்டும்.
- பெண்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் முழுப்பொறுப்பும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
- பெண்கள் குடும்பத்தில் ஏனைய ஆண் நபர்களின் ஆதரவவற்ற நிலையில் குடும்பத்தை புராமரிப்பவர்களாக இருத்தல்

எனினும் இந்த வரைவிலக்கணங்களுக்கு அப்பால் காணாமல் போனவரின் மனைவி, பலதாரமணமுடித்த கணவனின் மனைவி, அதிகரித்த மதுப் பாவனை காரணமாக குடும்பத்தினை பொறுப்பெடுக்க முடியாத கணவன் என்பவற்றையும் உள்ளடக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதாரப் பின்னடைவு

பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் அதிகமானவர்கள் கல்வி மற்றும் தொழில்சார் திறன்கள் அற்றவர்களாவே காணப்படும் நிலையில் முறைசாரா துறைகளில் மிகக்குறைந்த சம்பளத்துக்கு வேலைசெய்ய வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. எனினும் கல்வி வாய்ப்பை பெற்ற பெண்களாக இருந்தால் கூட வேலை வாய்ப்பினை பெறுதல் என்பது மிகவும் சவாலான விடயமாகவே காணப்படுகின்றது. அதிகமான பெண்கள் குறைந்தளவான தொழில்சார் திறன், சமூக மூலதனம் காரணமாக மிகவும் வறுமையான சூழலிலேயே வாழ்கின்றார்கள். பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வீட்டில் இருந்துகொண்டு செய்யும் சுய தொழில் முயற்சிகளான சிறுகடை, தையல் கைவினைப் பொருள்களை செய்தல், உணவு மற்றும் சிற்றுண்டி தயாரித்தல், கோழிவளர்ப்பு மற்றும் கால்நடை (ஆடு, மாடு) வளர்ப்பு, கருவாடு பதனிடல், மரக்கறி விற்றல் போன்றவற்றை மேற்கொள்கின்றார்கள். இவற்றுக்கு அப்பால் முறைசார்ந்த மற்றும் முறைசாரா துறைகளில் வேலைக்கு செல்லுதல், வீட்டுவேலைக்கு செல்லல், நாள்கூலி வேலை போன்றவற்றுக்கு செல்கின்றார்கள். பெரும்பாலும் இவர்கள் பொருளாதார மற்றும் சமூகத் தளங்களில் மிகவும் நலிவுற்றவர்களாக காணப்படுகின்றார்கள்.

இத்தகைய நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையினால் தொழில் இழப்பு, வருமான இழப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, மூலப்பொருள்கள் மற்றும் வாழ்வாதரத்துக்கான உள்ளீடுகளின் விலைகள் உயர்வடைந்தமை, சந்தை வாய்ப்புக்கள் குறைவடைந்தமை காரணமாக வருமானம் குறைவடைகின்றமையினால் போதிய உணவினை உண்பதற்கான சாத்தியப்பாடுகள் அற்றுக் காணப்படுகின்றது. அத்துடன் இத்தகைய பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது.

### திட்டமும் தீர்வும்

பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் வலுப்படுத்தல் ஆகியவற்றுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளாக சிலவற்றைப் பட்டியலிடலாம்.

- உரிய தகவல் தளத்தினைப் பேணல்.
- பொருளாதார நெருக்கடியினால் வருமான நிலை குறைந்த பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் தொடர்பாக அதிக கரிசனை கொள்ளல்.
- கிராமமட்ட அமைப்புகளில் அவர்களை உள்வாங்கி வலுப்படுத்தல்.
- பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நீக்குவதற்கு குடும்ப சமூக ஆதரவினை வழங்கல் வேண்டும்.
- வேலை செய்யும் பெண் தலைமைத்துவக்குடும்பங்களுக்கான விசேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். உதாரணமாக சிறுவர் பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- உள சமூக பிரச்சினைகளை ஆற்றுப்படுத்தலுக்கான கட்டமைப்புக்களை வலுப்படுத்தல்.
- பெண்தலைமைத்துவக்குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தும் வாழ்வாதார உலர் உணவு விநியோகத்தில் கரிசனை கொள்ளல்.
- சமூக கலாசார ரீதியாக எதிர்கொள்ளும் பாதகமான நடைமுறைகளை குறைப்பதற்காக விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
- உணவுப் பாதுகாப்பினை மேற்கொள்ளும் முகமாக வீட்டுத்தோட்டம் மற்றும் கால்நடை வளர்ப்பினை ஊக்குவித்தல்.

பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் சமூக பொருளாதார ரீதியில் நலிவுற்று இருப்பதனால், ஏனையவர்களில் தங்கி வாழும் நிலையில் உள்ளார்கள். தற்போதைய பொருளாதார நெருக்கீடு காரணமாக நடுத்தரவருமானப் பிரிவினர் ஒரு தொகுதியினரும் வறுமைநிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்கள் சமூக பொருளாதார கலாச்சார தளங்களில் எதிர்கொள்ளும் பாரபட்சங்களுக்காக ஒன்றிணைந்து குரல்கொடுப்பதன் மூலம் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பொதுத் தளத்துக்கு கொண்டுவந்து அவர்களுக்கான பிரத்தியேகமான தேவைகளை உணர்ந்து. திட்டங்களை முன்னெடுப்பதால் அவர்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும். எமது சமூகத்தில் சில பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தமது சொந்த குடும்ப வாழ்வினையும் பொது வாழ்வினையும் பல சவால்களின் மத்தியிலும் வழிநடத்திச் செல்பவர்களாக காணப்படுகின்றார்கள். எனவே ஏனைய பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் அவர்களுக்குரிய தளங்களை உருவாக்கி சரியான முறையில் அத்தளங்களை பயன்படுத்துவதன் மூலம் மிகச்சிறப்பாக எதிர்காலத்தில் வாழமுடியும்.

# தனியார்துறையினரின் ஊதியம் அதிகரிக்குமாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 23**

**தனியார்துறை ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச மாதாந்தச் சம்பளம் அதிகரிக்கப்படும். அதற்குத் தேவையான சட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- புதிய முதலீட்டாளர்களை அழைப்பதன் மூலம் தற்காலத்துக்கு ஏற்ற புதிய தொழில்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்கவேண்டும். வேலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முன்வைக்க விதிகள் மற்றும் விதிமுறைகளை மாற்ற வேண்டும்.

இந்த நாள்களில் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவது மிகவும் கடினமாக உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். இது சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை. உணவுச் செலவு சாதாரண மனிதனுக்கு எட்டாத அளவுக்குப் போய்விட்டது. எரிபொருளைப் பெறுவது மிகவும் கடினம். எனவே, தனியார்துறை ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பது குறித்து நாங்கள் விவாதிப்போம்.

தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச சம்பளத்தை அதிகரிக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகள் குறித்து கலந்துரையாடப்படும் - என்றார். (ம)



## சட்டவிரோத மணல் அகழ்வு: கைதாகிய மூவருக்கு பிணை

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு - நட்டாங்கண்டல் பறங்கியாற்றில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் மணல் ஏற்றப் பயன்படுத்திய 3 உழவு இயந்திரங்களையும் பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர்.

பாண்டியன்குளம் குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வாகனச் சாரதிகள் மூவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களை மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்தனர். (ச-19)



## மன்னார் இரட்டைக் கொலை மேலும் ஆறு பேர் கைது!

### இதுவரை 18 பேர் மறியலில்

மன்னார், ஜூன் 23

மன்னார் - உயிலங்குளம் பகுதியில் கடந்த 10 திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் ஆறு சந்தேக நபர்கள், மன்னார் பொலிஸாரல் கைது செய்யப்பட்டு நேற்றுக் காலை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மன்னார் - நொச்சிக்குளம் கிராமத்தில் இடம்பெற்ற இந்த வாள்வெட்டில் சகோதரர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலை தொடர்பில் இதுவரை 12 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேலும் 6 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். (ம-213)

## ரஷ்ய பாதுகாப்பு அமைச்சை நாடினால் மேலும் கடனுதவி

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23



பாதுகாப்பு அமைச்சுக்கு ரஷ்யா வழங்கிய கடன் உதவியில் பாதிக்கும் மேற்பட்ட தொகை இன்னும் எஞ்சியிருக்கின்றன. ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சை நாடும் பட்சத்தில் அந்தக் கடன்தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

11 சுயேச்சைக் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுமுன்தினம் ரஷ்யத் தூதுவரை சந்தித்தன. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் தற்போதைய நெருக்கடியான நிலமைக்கான குறித்த கடன் தொகையை பெற்றுக் கொள்வது குறித்து பரிசீலிக்க முடியும் என தூதுவர் தெரிவித்தார் என்றும் விமல் மேலும் தெரிவித்தார். (ம)

## 3 வருடங்களின் பின் எசல பெரஹராவை பார்வையிட அனுமதி

கொழும்பு, ஜூன் 23

கண்டி வரலாற்று புகழ்மிக்க வருடாந்த எசல பெரஹராவை மூன்று வருடங்களின் பின்னர் பொது மக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கண்டி வருடாந்த எசல பெரஹார ஆரம்பமாகவுள்ளது. இதேவேளை - உயிர்த்தஞாயிறு குண்டுத் தாக்குதல் மற்றும் கொரோனாத் தாக்கம் ஆகியவற்றால் கடந்த மூன்று வருடமாக எசல பெரஹராவை பார்வையிட மக்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



கோப்பு படம்

## நடமாடும் விற்பனை

கொடிகாமம், ஜூன் 23

கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தால் நடமாடும் விற்பனை இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு திருவையாறு 2ஆம் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் விதைகள், மரக்கறி நாற்றுக்கள் பழமரக் கன்றுகள் என்பன விற்பனை செய்யப்படவுள்ளன. (ம-159)

## நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் அறிக்கைப் பக்கங்கள் குறைப்பு

கொழும்பு, ஜூன் 23

நாடாளுமன்றில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகளின் பக்கங்களைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களால் நாடாளுமன்றுக்கு முன்வைக்கப்படும் அறிக்கைகளின் பக்கங்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கடதாசி தட்டுப்பாடு மற்றும் இறக்குமதி செலவினம் அதிகரித்துள்ளமையே இதற்கு காரணம். அதன்படி நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் அரச நிறுவனங்களின் அறிக்கை 3 மொழிகளிலும் 12 பக்கங்களைக் கொண்டதாக அமையவுள்ளது - என்றார்.



முன்னர் ஒரு மொழியில் தலா 300 புத்தகங்கள் வீதம் 3 மொழி களிலும் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அடிப்படை வசதிகளை அதிகரித்துக்கொள்ள செலவுகள் செய்வீர்கள். முயற்சியில் போராடி வெற்றி பெறுவீர்கள். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். கூடுதல் பொறுப்பு வந்து சேரும்.

**இடபம்:** நிதிநிலை உயரும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சினை சரியாகும். வீட்டில் சுப நிகழ்ச்சிக்குரிய பேச்சு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** தொழிலில் ஏற்பட்ட தடைகளை சரிசெய்வீர்கள். முயற்சி வெற்றியாகும். வேலை வாய்ப்புக்காக முயற்சி மேற்கொண்டவர்களுக்கு சாதகமான பதில் வரும்.

**கடகம்:** தொல்லை கொடுத்தவர்கள் விலகிச் செல்வர். நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் உங்கள் கை மேலோங்கும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும்.

**சிம்மம்:** மற்றவரை நம்பி பணிகளை ஒப்படைக்க வேண்டாம். அதனால் சங்கடமே உண்டாகும். முயற்சிகளில் தடைகளும் தாமதங்களும் உண்டாகும். சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி:** எண்ணம் நிறைவேறும் நாள். நண்பர்களால் புதிய பாதை தெரியும். திட்டமிட்டிருந்த செயல்களை திட்டமிட்டபடி நிறைவேற்றி முடிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்சினை விலகும்.

**துலாம்:** உங்கள் அணுகுமுறையை மாற்றி செயற்பட்டு நினைத்ததைச் சாதிப்பீர்கள். வேலைவாய்ப்பு குறித்த சிந்தனை மேலோங்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நன்மையளிக்கும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்:** குடும்ப உறவுகளிடம் செல்வாக்கு உயரும். எண்ணங்கள் நிறைவேறும். நீங்கள் ஈடுபடும் முயற்சி ஒன்றில் ஆதாயம் காண்பீர்கள். நல்ல நாள். பணிபுரியும் இடத்தில் அதிகாரியின் பாராட்டுக்கு ஆளாவீர்கள்.

**தனுசு:** உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. பணியில் உண்டான பிரச்சினைகளை சரி செய்வீர்கள். செல்வாக்கு வெளிப்படும் நாள். புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**மகரம்:** நீங்கள் எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். எதிரித் தொல்லை விலகும். பணியில் இருந்த சங்கடம் விலகும். ஆதாயம் உண்டாகும். புதிய பொறுப்பு உங்களைத் தேடி வரும்.

**கும்பம்:** திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பால் எண்ணம் பூர்த்தியாகும். பண வரவு மகிழ்ச்சி தரும். உங்கள் தேவை பூர்த்தியாகும்.

**மீனம்:** நேர்மறை எண்ணம் உருவாகும். பொன் பொருள் சேர்க்கையில் கவனம் செலுத்துவீர்கள். வருவாய் அதிகரிக்கும். சுபநிகழ்ச்சி நடத்த முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள்.

# ஆப்கானில் நிலநடுக்கம்

## 1,000க்கும் மேல் பலி

காபூல், ஜூன் 23

**ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கு பக்திகா மாகாணத்தை நேற்று உலுக்கிய சக்திவாய்ந்த பெரும் நிலநடுக்கத்தால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலநூறுபேர் படுகாயமடைந்துள்ள நிலையில் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.**







ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கு கோஸ்ட் நகருக்கு அருகே நேற்று அதிகாலை 6.1 ரிக்டர் அளவில் 51 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் நூற்றுக்கணக்கான கட்டடங்களும் வீடுகளும் இடிந்து வீழ்ந்துள்ள நிலையில் இடிபாடுகளுள் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் மீட்புப் பணியில் ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதேவேளை இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைகளுக்குள் சுமார் 500 கிலோமீற்றர் தூரத்துக்கு பூகம்பம் உணரப்பட்டதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதேவேளை பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் அனுப்பப்பட்டுள்ளன என தலிபான் அரசு தெரிவித்துள்ளது. (ச-இ)

## பாகிஸ்தானில் நிலநடுக்கம்!

இஸ்லாமபாத், ஜூன் 23

பாகிஸ்தானில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று பாகிஸ்தானின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதிகளில் உணரப்பட்ட இந்த நிலநடுக்கம் 6.1 ரிக்டர் அளவுகோலாகப் பதிவானது. நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் குறித்த தகவல் வெளியாகவில்லை. (ம)

### ஜோ பைடனின்

## அறிவியல் ஆலோசகராக இந்தியப் பெண் நியமனம்

வொஷிங்டன்,ஜூன் 23



அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆலோசகராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண்ணொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

63 வயதான ஆர்த்தி பிரபாகர் என்பவரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அமெரிக்க அதிபரின் அறிவியல் ஆலோசகராக நியமிக்கப்பட்ட முதல் பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். (ச-இ)

## செயற்கைக் கோளை ஏவிய தென்கொரியா

சியோல், ஜூன் 23

தென்கொரியா தனது உள்நாட்டுத் தயாரிப்பான முதல் செயற்கைக்கோளை வெற்றிகரமாக நேற்று விண்ணில் ஏவியுள்ளது. 'நூரி' எனப்படும் இந்த செயற்கைகோளை பூமியில் இருந்து 700 கி.மீ. தொலைவில் துல்லியமாக செலுத்தியுள்ளது.

இதன்மூலம் செயற்கைக்கோளை புவியின் சுற்று வட்டப் பாதையில் வெற்றிகரமாகச் செலுத்துவதற்கான தொழில்நுட்பமும், பெரிய வகை ரொக்கட்டுக்களைத் தயாரிக்கும் திறனும் தம்மிடம் உண்டு என தென்கொரிய அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை தொழில்நுட்பத்தில் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் 10ஆவது நாடு தென்கொரியா என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




















அம்பாறை - சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட 51 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ய)



புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் 150ஆவது வருடத்தை முன்னிட்டு, இலங்கை மத்திய வங்கியால் 20 ரூபா பெறுமதியான ஞாபகார்த்த நாணயக்குற்றி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. இந்த நாணயக்குற்றி திருகோணமலை மாவட்ட செயலர் பி.எச்.என்.ஜயவிக்ரமவுக்கு மாவட்ட புள்ளிவிவரவியலாளரால் வழங்கப்பட்டது. (ய)



கிழக்கு ஐக்கிய பெண்கள் அமைப்பால், குடும்ப வன்முறை மற்றும் தீர்வுகள் தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. அண்மைக்காலமாக குடும்பங்களில் அதிகரித்துவரும் வன்முறைகள் தொடர்பாகவும் அதன் காரணங்கள் தொடர்பாகவும் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது. (ய)

# கணினி பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 23

கணினிகளில் தங்களுடைய பணிகளை எந்தவித சந்தேகங்களும் இன்றி சிறப்பாக உத்தியோகத்தர்கள் மேற்கொள்வதற்காக, வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் புதிதாக இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஏற்கனவே பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களுக்குரிய கணினிப் பயிற்சிப் பட்டறை நேற்று நடைபெற்றது. தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் ஜெபநேசனின் செயற்றிட்டத்துக்கு அமைவாக நவீன முறையில் கணினி தொடர்பான அறிவூட்டல் மற்றும் மென்பொருள் தொடர்பான பயிற்சிகள் தேர்ச்சிபெற்ற வளவாளர்களால் வழங்கப்பட்டன. (ய-125)



# மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.45 மணி தொடக்கம் 10.26 மணி வரை இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேக கிரியா நிகழ்வுகள் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி ஜூலை முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் இடம்பெறும் என்று பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தில் வெளிப்படைத்தன்மை பேணுக

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 23**

**கூட்டுறவுத்துறைக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகத்தில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் அறிவுறுத்தியுள்ளார்.**

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கு நேற்று அனுப்பியுள்ள சுற்றறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாவட்டச் செயலரது அல்லது பிரதேச செயலரது அறிவுறுத்தல் இன்றி எந்தவொரு பகுதியினருக்கும் விசேடமாக எரிபொருள் வழங்குகின்ற செயற்பாடுகள் அமைதல் கூடாது என்பதை நான் தங்களுக்கு இறுக்கமாக வலியுறுத்துகின்றேன்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எந்த அதிகாரிகளது அறிவுறுத்தல்களுக்கும் அமைய கொள்கலன்களில் பெற்றோல் நிரப்பி திணைக்கள அலுவலர்களுக்கென அனுப்புவது முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும்.

மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய பிரதேச செயலர்களின் வழிகாட்டலுடன் உற்பத்திச் சாலைகளுக்குத் தேவையான டீசல், மண்ணெண்ணெய் விநியோகமானது உரிய உறுதிப்படுத்திய ஆவணங்களுடன் மட்டுமே இடம்பெறவேண்டம்.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்படுத்தப்படுகின்ற சில தவறான நடவடிக்கைகள் ஒட்டுமொத்த கூட்டுறவுத் துறைக்கும் களங்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துவிடும். தற்போதைய இடர்கால விநியோகத்தில் எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர்கள் சிலரால் மேற்கொள்ளப்படுகின்ற தவறான நடவடிக்கைகள் அல்லது மோசடி நடவடிக்கைகள் தொடர்பாக இயக்குநர் சபை மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

எரிபொருள் விநியோகத்தில் போதிய மேற்பார்வைகள், அறிவுறுத்தல்களை வழங்குவதுடன், பணியாளர்களால் ஏதேனும் தவறுகள், மோசடிகள் இடம்பெறுமாயின் அந்த இயக்குநர் சபை மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும்- என்றுள்ளது. (எ-இ)

# மின்சார சபை ஊழியர்களுக்கு அனுமதியின்றி கொடுப்பனவு!

கொழும்பு, ஜூன் 23

2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் அமைச்சரவையின் அனுமதியின்றி இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு பல்வேறு கொடுப்பனவுகளாக 367 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் வழங்கப்பட்டுள்ளது என்று கோப் குழுவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி, கொள்வனவு, விநியோகம் மற்றும் திட்டங்கள் தொடர்பில் ஆராய தனியான கூட்டமொன்றை நடத்தவும் கோப் குழு தீர்மானித்துள்ளது.

2021ஆம் ஆண்டு வரைவு கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கை மின்சார சபை தனது ஊழியர்களின் சம்பளத்தை 25 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று கோப் குழு தெரிவித்துள்ளது.

எனினும் இந்த வரைவில் சம்பந்தப்பட்ட தரப்பி னர், முதலாளிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் கைச்சாத்திடாத காரணத்தால் கூட்டு உடன்படிக்கை முடிவடையாத வரைவு என்பதால் இது சட்டபூர்வமான ஆவணம் அல்ல என தெரியவந்துள்ளது. (எ-இ)

# இலங்கைக்கு டொலர் அனுப்பினால் தள்ளுபடி

## ஆஸி. வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு, தமது வங்கியின் ஊடாக இலங்கைக்குப் பணம் அனுப்புபவர்களுக்கு அதற்குரிய கட்டணத்திலிருந்து 6 அவுஸ்திரேலிய டொலரைத் தள்ளுபடி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவுஸ்திரேலிய கொமன்வெல்த் வங்கி அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் பல்தேசிய வங்கிகளில் ஒன்றான இந்த கொமன்வெல்த் வங்கி, இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் கொமன்வெல்த் வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் கருத்திற்கொண்டு, எந்தவொரு நபரேனும் எமது வங்கியின் ஊடாக இலங்கையிலுள்ள தமது நண்பருக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ பணம் அனுப்பும் பட்சத்தில், அப்பணம் அனுப்பலுக்கான கட்டணத்தில் 6 அவுஸ்திரேலிய டொலர் தள்ளுபடி செய்யப்படும்.

இந்தச் சலுகை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதை முன்னிறுத்தி வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலை அதிகரிப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள முதலாவது வெளிநாட்டு முயற்சியாக இது அமைந்துள்ளது. (எ-இ)




# விவாகச் சட்டம் தொடர்பாக சந்திப்பு

கொழும்பு, ஜூன் 23

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்ட மறுசீரமைப்பு தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்சவைச் சந்தித்துள்ளனர்.

சந்திப்பில் முஸ்லிம் விவாக சட்டம் தொடர்பில் மதிப்பீடு செய்து, முஸ்லிம் பெண்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடிய வயதை 18 ஆக அதிகரிப்பதற்கும் திருமணத்தின் போது சாட்சி கையெழுத்திடுவதற்கு பெண்களுக்கு வாய்ப்பளிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பலதார திருமணங்கள் தொடர்பிலும், முஸ்லிம் விவாக - விவாகரத்து சட்டம் தவிர்ந்த, சகல முஸ்லிம் சட்டங்கள் தொடர்பிலும் மதிப்பீடு செய்து, மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய முறைமை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# பொருளாதார நெருக்கடியால் மதுபான தேவையில் குறைவு!

கொழும்பு, ஜூன் 23

நாட்டில் மதுபானத்தின் விலை அதிகரிப்பு மற்றும் நாட்டில் பொது மக்களின் வருமானம் குறைந்தமை காரணமாக மதுபானத்துக்கான தேவை 30 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் கூடியபோதே இந்த விடயங்கள் வெளிப்பட்டன.

விசேடமாக அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு ஒன்லைன் முறையின் கீழ் சில நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை மதுவரித் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மதுவரித் திணைக்களத்தால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை அடைவதில் சிக்கல்கள் சில காணப்பட்டன என்றும், மதுபான உற்பத்திக்கான எதனோல் குறைந்தமை, டீசல் மற்றும் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் இதற்குக் காரணமாக அமைந்தன என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அத்துடன், மதுபானத்தின் விலை அதிகரிப்பு, பொது மக்களுக்குக் காணப்படும் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக மதுபானத்துக்கான தேவை 30 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் தற்போதைய நிலை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டதுடன், வரிக் கொள்கைகளை எவ்வாறு மாற்றுவது மற்றும் வரி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஒன்லைன் மூலம் கலந்துகொண்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இந்த ஆண்டு இலங்கை கலால் திணைக்களம் பெற எதிர்பார்க்கும் வருமானம் தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. (எ-இ)

# மட்டக்களப்பில் மின்னல் தாக்கி 30 மாடுகள் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தௌலானை பகுதியில் மின்னல் தாக்கி 30 மாடுகள் ஒரே தடவையில் உயிரிழந்துள்ளன.

மட்டக்களப்பு-அம்பாறை எல்லைப்பகுதியான தௌலானை மேய்ச்சல் தரை பகுதியில் மரங்களின் கீழ் நின்ற 30 மாடுகளே இவ்வாறு நேற்றுமுன்தினம் மாலை மின்னல் தாக்கி உயிரிழந்தன.

இது தொடர்பில் போரதீவுப்பற்று பிரதேச செயலகம் மற்றும் கால்நடை திணைக்களம் ஆகியவற்றின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக கால்நடை பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதாரத்தை...

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரை ஒன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றினார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 700 மில்லியன் டொலர் கடனில் உள்ளது. அதனால் எந்த நாடும் அல்லது அமைப்பும் எமக்கு எரிபொருள் வழங்கத் தயாராக இல்லை. பணத்துக்குக் கூட எரிபொருளைக் கொடுக்கத் தயங்குகின்றார்கள்.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்றதில் இருந்து இரு வாரங்களுக்கு ஒரு முறை நாடு எதிர்கொள்ளும் உண்மையான நிலைமை மற்றும் அதை நிவர்த்தி செய்வதற்கு நாம் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாக உங்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். அதைச் சிலர் கிண்டல் செய்கின்றனர்.

நாடு எதிர்கொள்ளும் கஷ்டங்களை எங்களிடம் சொல்வதற்கா அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார் என்று விமர்சிக்கின்றனர். ஆனால் நாங்கள் அவர்களிடம் முழு உண்மையையும் கூறுகிறோம் என்பதற்காகப் பலர் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இந்தச் சிக்கல்களைச் சமாளிக்க எங்களுக்கு உதவும் பல்வேறு திட்டங்களை முன்வைக்க அவர்கள் முன்வந்துள்ளனர். எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கு அப்பால் மிக மோசமான நிலைமையை நாம் இப்போது எதிர்கொண்டுள்ளோம். நமது பொருளாதாரம் முழுமையான சரிவைச் சந்தித்துள்ளது. அதுதான் இன்று நம் முன் உள்ள மிகத் தீவிரமான பிரச்சினை. இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதே இப்போது எம்முன் உள்ள ஒரே பாதுகாப்பான தெரிவாகும். அதன்மூலம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான அடித்தளத்தை உருவாக்கி, நமது ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான உடனடி வேலைத்திட்டத்தை செயற்படுத்துவோம் என்று நம்புகின்றோம் - என்றார். (அ-எ-இ)

## சிறிலங்கா...

இந்திய அரசாங்கத்தின் உயர்மட்ட குழுவொன்று இன்று இலங்கைக்கு வரவுள்ளது என்று தகவல் வெளியாகியிருந்த நிலையில், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிறிலங்கா வருவது தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய அரசாங்கத்தின் மூன்று பிரதிநிதிகள் நாளை (இன்று) சிறிலங்காவுக்கு வருகின்றனர் என்றும், நாட்டுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ், 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டுள்ள நிலையில், மேலும் நிதியுதவியை இந்தியாவிடம் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் -என்றும் தெரிவித்திருந்தார். (அ-எ-இ)

## ரணில்...

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரைப் பொலிஸார் அங்கிருந்து அகற்ற முயன்றபோதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தங்களைச் சந்திக்கும் வரையில் அந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்ததால் அங்கு பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

எதிர்ப்புப் போராட்டம் காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லம் அமைந்துள்ள கொழும்பு, பிளவர் வீதியின் 5ஆம் ஒழுங்கை மூடப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீண்ட நேரம் வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்திய நிலையில், அவர்களை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர். (அ-எ-இ)

ஆங்கில, தமிழ் மொழிமூல வகுப்புக்கள்
வீடுகளுக்கு வந்து கற்பித்தல், தனி, குழு
புவி, குடி, வரலாறு, கணக்கீடு, ஆங்கிலம்
தரம் 6 - 13 வரை - வெளிநாட்டுக் கற்பித்தல்
அனுபவம் உடைய ஆசிரியர்.
077 331 6402

தேவை
யாழ் நகர் ரவுணில் முன்னணி புத்தகசாலைக்கு காசாளர், விற்பனை உதவியாளர், முகாமையாளர் உடனடியாகத் தேவை.
(CS 45294) (3/6)
072 287 5625, 076 711 5374

உங்கள் தேவைக்கான தேடல்
ஒவ்வொரு விடியலும் உங்களின் அடுத்த
வெற்றிக்காகத்தான் விடிகிறது.
இன்றே தொடங்கு உங்கள் கனவை நினைவாக்க!
உலகின் எங்கோ ஒரு மூலையில்
உங்கள் கேள்விக்கான பதில் கிடைக்கும்.
Try
www.youtooda.com
USE OUR WEB PLATFORM FREE
முயல்வோம் முடியும்வரை
வாழ்வோம் <..... (நன்றாக) .....> வாழவைப்பேம்
www.youtooda.com Team

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28.05.1954 — மறைவு 04.07.2021

முடமாவடிச் சந்தியைப் பிறப்பிடமாகவும்
கனடா ரொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திரு. நவரட்ணம் தனபாலசிங்கம் (தனா)

நீங்காத நினைவுகள் தந்து
நீண்ட தூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
பார்த்த விழிகள் தேடுகின்றன.
ஆறாது உங்கள் நினைவுகள்
அழியாது உங்கள் புன்னகை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 45287) (3/6)

நித்தம் உங்கள் நினைவுகளோடு
செல்வமணி - மனைவி (கனடா),
லக்னேஸ் - மகன் (கனடா), கபில்கா - மகள் (கனடா)

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 03 . 1967



இறப்பு 21 . 06 . 2022

## நாகேஸ்வரன் பத்மாவதி (தங்கராணி)

யாழ் சங்கானையைப் பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயினை வதிவிடமாகவும் கொண்ட நாகேஸ்வரன் பத்மாவதி நேற்றுமுன்தினம் (21.06.2022) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மரியம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், நாகேஸ்வரனின் அன்பு மனைவியும், மதியழகன், கஸ்தூரி, மோசே, கிருபா, ஸ்ரான்லி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரான்சிஸ், உசாந்தினி, எப்சிபா ஆகியோரின் மாமியாரும், கெவின், செரின், யாபேஸ், ஆத்வீகன், மீசாயேல், யோவேல் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சிலுவைராசா, சண்முகராசா, கிறிஸ்துராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, திருவுடல் பிப்பிலிமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 869 7292
077 788 5549

(cs.45297) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல் - 2022

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகளினை 2022 ஆம் ஆண்டின் (01.07.2022 - 31.12.2022) வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏலம் நடைபெறும் திகதி : 2022.06.29 (புதன்கிழமை) முற்பகல் 11.00 மணி.
இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலக முன்றல், புத்தூர்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அக்கரை கடற்கரை – வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடல் | 250.00 | 2000.00 | 30,690.00 | 500.00 |
| 02 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை (மீன் சந்தை உட்பட) | 250.00 | 2000.00 | 141,075.00 | |
| 03 | வளலாய் தம்பாலை கோழியிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 129,686.00 | 250.00 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 04 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 218,790.00 | 2250.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 05 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 307,445.00 | 2250.00 |
| 06 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 250.00 | 2000.00 | 218,790.00 | 2250.00 |

ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 250.00 இனை செலுத்துதல் வேண்டும். ஏலக்கேள்வியில் தெரிவு செய்யப்படும் **ஏலதாரர்கள் உடனடியாக மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையினை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.**

ஏலத்தில் பங்குபெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையினை கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப் பிரதியையும் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது உரிய பெயரிலுள்ள மின்சாரப்பட்டி யல் பிரதி அல்லது வங்கிக் கணக்குப்புத்தகத்தின் பிரதி ஏதாவதொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

சித்தியடையும் கேள்விதாரர் கோரிய கேள்வித்தொகையினது 03 மாத தவணைக்கட்டணத்தினை 2022.06.30 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக சபையின் உப அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2022.06.23**

(cr.36243) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1949



மறைவு 18 . 06 . 2022

## திருமதி லோகேஸ்வரி சோதிநாதன்

கொக்குவில் கிழக்கு பரியாரியார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, கருவப்புலம் வீதி 5ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி சோதிநாதன் அவர்கள் கடந்த (18.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சோதிநாதனின் (Mechanic) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், இரத்தினம் சிவமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், தர்மினி (கனடா), பத்மினி (பிரான்ஸ்), ராஜினி (மாவட்ட விவசாயத்திணைக்களம், யாழ்ப்பாணம்), செந்தில்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோணேஸ்வரன் (கனடா), சுசீலன் (பிரான்ஸ்), விஜயரூபன் (முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட நீதவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை), சுமணா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, சிரோன்மணி, பாலசிங்கம், பத்மநாதன், சிவராஜா, இராசாத்தி, சரோஜினிதேவி, தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிறேமநாதன், சிவநாதன், காலஞ்சென்ற சர்வலோகநாதன், விமலநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பேரின்பநாதன் ஆகியோரின் மைத்துனியும், கிருத்திகன், சந்தோஸ், அஸ்விகா, ஜஸ்மிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 397) (3/6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சிவலிங்கராசா தங்கேஸ்வரி (தனம்)

தோற்றம் 22.06.1965
மறைவு 21.06.2022

புங்குடுதீவு 04ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 30 வீட்டுத் திட்டம் பாலி நகர் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கராசா தங்கேஸ்வரி (தனம்) அவர்கள் கடந்த (21.06.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு மாணிக்கம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், முருகேசு சிவலிங்கராசா அவர்களின் அன்பு மனைவியும், டினோத், பானுஜன், யதுகாந்த், பிரபுராஜ், கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் பாலி நகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பிற்காக
077 466 3544, 077 912 2656

தகவல்:
குடும்பத்தினர்

(CS 396) (3/6)

# மரண அறிவித்தல்



## Dr.திருமதி நாகம்மா சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமான Dr.திருமதி நாகம்மா சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரி) நேற்றுமுன்தினம் (21.06.2022) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Malayan Pensioner தில்லையம்பலம் கந்தையா - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னக்குட்டி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற விஞ்ஞான பட்டதாரி - ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், பிரபாவதி (தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை கொழும்பு, ரத்மலானை), சிவரூபினி (Srl Lanka Telecom, Colombo) கிருபாலினி, சிவநேயச்செல்வி, பிரகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசோதி (இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி கொழும்பு), சிவராசா (கொழும்பு), நந்ததேவா (ONALLY HOLDINGS, PLC, UNITY PLAZA, COLOMBO - 04), ஆனந்தகுமார் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியும், விஸ்ணுகா, காண்டீபன், பானுகரன், பவதாரணி ஆகியோரின் அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், பரமேஸ்வரி, ஈஸ்வரி, இலட்சுமணன், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள இன்று (23.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் A.F.Raymond மலர்சாலை பொரளையில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்திற்கு நண்பகல் 12.30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Prabha : 077 395 0521
Rubini : 071 428 1271, 011 236 0666
Kiruba : 071 851 8519
Selvi : 071 455 5622
Kala : 076 790 6640

தகவல்:
பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 02 . 1939



மறைவு 20 . 06 . 2022

## செல்லத்துரை பாலசுப்பிரமணியம்

(முன்னாள் துறைமுக அதிகார சபை லகிதர்)

அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கு மேலயப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலசுப்பிரணியம் (முன்னாள், துறைமுக அதிகார சபை லிகிதர்) அவர்கள் கடந்த (20.06.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற தவமணிதேவியின் அன்புக் கணவரும், நரேந்திரன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட காரியாலய ஊழியர்), சுரேந்திரன் (Dubai), ரமேந்திரன் (France), சுஜாதா (ஆசிரியை, அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலை), கவீந்திரன் (Senstar) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வசாந்தி, சுபாசினி (கணக்காளர்), ரதிதேவி (France), சிவலிங்கம், சிவாந்தி (ஆசிரியை, வல்வை மகளீர் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், விஸ்வதாரணி, வத்ஷாயினி, அபிஷாளினி, சஹானா, கீதஅபிநயா, கஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் தவமணிதேவி, சிவஞானம் (London) வள்ளிநாயகி (London), காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் அருளானந்தம் (London), ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஷாக்கா காலஞ்சென்றவர்களான நல்லையா, சறோஜினி மற்றும் சிறிதரன் (London), கமலேஸ்வரி (London), எடித் (London), கந்தசாமி, குணமணிதேவி, கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புக்கு
076 303 1115, 077 356 4459

தகவல்:
குடும்பத்தினர்

(CS 45920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ். கோட்டை...

மீட்கப்பட்டுள்ளது.

முனீஸ்வரன் ஆலய பின் பகுதியில் உள்ள அகழியில் சடலம் காணப்படுகின்றது என்று யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## இடைக்கால...

இந்திய உதவி திட்டத்தின் கீழ் 4 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி மற்றும் 500 மெற்றிக்தொன் பால் மா என்பன கிடைக்கவுள் ளன. இந்த நிவாரணப் பொருள்களை கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினருக்கு எதிர்காலத்தில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எரிவாயுப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்காக, ஒரு இலட்சம் மெற்றிக்தொன் எரிவாயு கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்காக உலக வங்கியின் 70 மில்லியன் டொலரும், சிறிலங்கா அரசாங்கத்தின் 20 மில்லியன் டொலர் நிதியும் பயன்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (அ-எ-இ)

## தொழிற்சங்க...

மன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவு எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 9 ஆம் திகதி, இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், அது தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி பூர்ணிமா பரணகம இதற்கான உத்தரவை பிறப்பித்தார். இலங்கை மின்சார சபை தாக்கல் செய்த முறைப்பாட்டை நேற்று மீளவும் ஆராய்ந்தே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி வரையில் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம், அதன் அலுவலக ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் எந்தவொரு வேலைநிறுத்தம் அல்லது தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இதுருவ, சங்கத்தின் செயலர் தம்மிக விமலரத்ன ஆகியோருக்கே இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை பதிவு செய்த இலங்கை மின்சாரசபைக்காக, சட்டத்தரணி சனத் விஜேவர்த்தனவின் அறிவுறுத்தல் பிரகாரம், ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான சட்டத்தரணிகளான ருவந்த குரே, நாக்மி நபாத் உள்ளிட்ட குழுவினர் முன்னிலையாகியிருந்தனர்.

இந்த முறைப்பாட்டை [illegible] எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுக்கப்படவுள்ள நிலையில், அன்று பிரதிவாதிகள் தரப்பு தமது ஆட்சேபணைகளை மன்றில் முன் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-இ)

## தருமபுரத்தில்...

3 மணியளவில் நடந்துள்ளது. தாக்குதலில் வீட்டின் கதவு, வீட்டில் முன்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டிகள், தளபாடங்கள் எனப் பல பொருள்கள் அடித்து உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

அந்த வீட்டில், போரில் கணவனை இழந்த 5 பிள்ளைகளைக் கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பமே வசிக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகத் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-எ-113)

## கடலுக்கு...

லுக்குச் சென்ற நால்வர் இன்னும் கரை திரும்பவில்லை. எரிபொருள் தட்டுப்பாட்டால் அவர்களைத் தேடும் நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

கடற்றொழிலுக்குச் சென்ற நால்வரும் நேற்று முற்பகல் 10 மணியளவில் கரை திரும்பவேண்டும் என்றும், எனினும் அவர்கள் இன்னமும் கரை திரும்பவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர்களைத் தேடும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு எரிபொருள் இல்லை என்பதால், இது தொடர்பாகக் கடற்படைக்கு அறிவிக்கப்பட்டு, அவர்களைத் தேடுதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (அ-எ-20)

## பிரதேச...

யங்களில் முன்னுரிமை மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மக்கள் நாள்கணக்காக வரிசைகளில் காத்திருக்கும் நிலையில், பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நடைமுறையை மீறி பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

திருநெல்வேலிச் சந்திக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நேற்று இவ்வாறு பெற்றோல் வழங்கப்பட்டதால், அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டது. சாதாரண மக்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கும், பரீட்சை வினாத்தாள் மதிப்பீடு செய்யச் செல்லும் ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகிக்கப்படும் நிலையில், நேற்று நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு 4 ஆயிரம் ரூபாவுக்கும் பெற்றோல் நிரப்பப்பட்டது என்று அங்கிருந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தற்போது சுழற்சி முறையிலேயே அரச ஊழியர்கள் பணிக்கு அழைக்கப்பட்டிருக்கும் நிலையில், பிரதேச செயலகத்தில் பணியாற்றும் 500க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்ட [illegible] குப் பெற்றோல் விநியோகிக்கப்படு வதால் சாதாரண மக்களும், அத்தியாவசியப் பணியாளர்களும் பாதிக்கப்படுகின்றனர் என்று மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களின் கீழ் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படும் என்ற நடைமுறையை அறிவித்த யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், நடைமுறையில் என்ன நடக்கின்றது என்பதை அறியாதுள்ளது அல்லது கண்டும் காணாது இருக்கின்றது என்று எரிபொருளுக்காக வரிசைகளில் காத்திருந்த மக்கள் கடும் விசனத்துடன் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்ப நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதுடன், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே ஏற்படும் என்றும் வரிசைகளில் காத்திருந்த மக்கள் தெரிவித்தனர். (அ-எ-5-125)

## தத்தளிக்கிறதே...

தம்மிக்க பெரேரா நாடாளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்பாக நேற்று பதவியேற்றார். முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இலங்கையின் பிரபல வர்த்தகரான தம்மிக்க பெரேரா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு விரைவில் அமைச்சுப் பதவி ஒன்றும் வழங்கப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகின்றது.



நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின்னர் கருத்துத் தெரிவித்த தம்மிக்க பெரேரா, பதவியேற்பதற்கு முன்னர் தனது சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களையும் வரிகளை செலுத்தியமைக்கான ஆவணங்களையும் சமர்ப்பித்துவிட்டேன். தற்போதைய சவாலான சூழ்நிலையிலும் நான் முதலீட்டாளர்களைக் கவருவது தொடர்பான நம்பிக்கையுடன் உள்ளேன். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கவுள்ளேன். இலங்கை மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பல் என நான் கருதவில்லை. மாறாக இது வேகமாக தடுமாறிக் கொண்டிருக்கும் கப்பல் மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் எவரும் ஏறமாட்டார்கள் -என்றும் தெரிவித்தார். (எ-இ)

## சிறிலங்காவுக்கு...

நியூயோர்க் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 250 மில்லியன் டொலருக்கும் அதிக நிதி மற்றும் 7.3 மில்லியன் டொலர் வட்டி ஆகியவற்றை ஜூலை 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச கடன்களை மீளச் செலுத்த முடியாது என இலங்கை ஏற்கனவே அறிவித்துள்ளது. இந்தநிலையில், ஜூலை 25 ஆம் திகதி ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பிணைமுறி காலாவதியாகவுள்ளது. 2012 ஆம் ஆண்டு அமெரிக்காவின் எச்.எஸ்.பி.சி. வங்கியுடன் அப்போதைய மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்ட அஜித் நிவாட் கப்ரால் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு அமைய, ஒரு பில்லியன் டொலருக்கான பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட்டது.

அதில் 250.19 மில்லியன் டொலர் பிணையை தனிநபர் முதலீடாக, அமெரிக்காவின் ஹமில்ட்டன் ரிசர்வ் வங்கி என்ற வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்றிடம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த பிணையங்கள் காலாவதியாகும் போது 5.8 வீத வட்டி செலுத்தப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. எதிர்வரும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி இந்த பிணையம் காலாவதியாகும் போது, முதலீட்டுக்காக 7.349 மில்லியன் டொலர் வட்டியை செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் பிணையை திருப்பிச்செலுத்தும்போது, கடனை திருப்பி செலுத்துவதற்கான இயலுமை காணப்படுவதாகவே சிறிலங்கா அதிகாரிகள் கூறினர் என்று அமெரிக்காவின் ஹமில்டன் ரிசர்வ் வங்கி தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் போனமைக்கு, ஆட்சி செய்யும் ராஜபக்சக்களும், அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளின் செயற்பாடுகளுமே காரணம் என அமெரிக்க நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ச குடும்பத்தவர்கள் பல வருடங்களாக ஊழல் மோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்படுவோர். அமெரிக்காவின் முன்னாள் இராஜதந்திரியும் புலனாய்வு ஊடகவியலாளருமான ஒருவரால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கு அமைய, ராஜபக்ச குடும்பத்தினர் பல பில்லியன் டொலர் சொத்துக்களை குவித்து, தளர்வான நிதி விதிகளுடன் டுபாய், சீஷெல்ஸ் மற்றும் செென்.மார்ட்டீன் தீவில் மறைத்து வைத்துள்ளனர். அமெரிக்காவின் தரவுகளுக்கு அமைய, பஸில் ராஜபக்ச என்ற இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் அரசாங்கத்தில் பதவிகளை வகிப்பதற்கு முன்பிருந்தே 'மிஸ்டர் 10%' என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டார். அனைத்து செயற்றிட்டங்களிலிருந்தும் 10 வீதத் தரகுப் பணத்தைக் கோரும் வழக்கம் அவரிடம் காணப்பட்டமையாலேயே இவ்வாறு அழைக்கப்பட்டார்

சிறிலங்காவால் இந்த வழக்கில் இருந்து விடுபடுவதற்கு எந்தவித விடுபாட்டு உரிமையும் இல்லை என்று ஹமில்டன் ரிசர்வ் வங்கி தாக்கல் செய்துள்ள மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## அத்தியாவசிய...

யாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கே பெற்றோல் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஏனையோருக்கு இன்று பெற்றோல் விநியோகிக்கப்படாது என்றும், அதனால் வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்றும் கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-எ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியப் பேரவையால் மல்லாகத்தில் புத்தக அரங்கவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 23
தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தலைப்பிலான புத்தக அரங்க விழா நாளை 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் மல்லாகம் மகா வித்தியா லயத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும் பதிப்பாளரும் நடு இணைய இதழின் ஆசிரியருமான கோமகன் நினைவாக இடம்பெறும் இந்த அரங்க விழாவுக்கு தாயகம் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியரும் 'எங்கட புத்தகங்கள்' சஞ்சிகையின் இணை ஆசிரியரும் ஆய்வாளருமான ச.சத்தியதேவன் தலைமை தாங்கவுள்ளார்.

இதன்போது ஈழத்து நூல்களின் அறிமுகம், நாடக ஆற்றுகைகள், இலக்கியக் கலந்துரையா டல் மற்றும் புத்தகக் கண்காட்சி மலிவு விற்பனை ஆகியவை இடம்பெறவுள்ளன.

இந்த அரங்க விழாவில் நூல்களின் அறிமுக உரைகளை எழுத்தாளர் சோ.தேவராஜா, ஆசிரிய ஆலோச கரும், எழுத்தாளருமான க.சிவக ரன், ஆசிரியரும், எழுத்தாளருமான ஸ்ரீலேகா பேரின்பகுமார், உளவளத் துணையாளரும் சமூக செயற்பாட்டாளருமான செ.திலீபன், கலாசார உத்தி யோகத்தர் ச.தனுஜன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். நிகழ்வில் கலை இலக்கிய ஆர்வமுள்ள அனைவ ரும் கலந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள் ளனர். (ச)

# ரட்டா உட்பட எழுவருக்கு ஜூலை 1 வரை மறியல்

கொழும்பு, ஜூன் 23
கடந்த 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் கோட்டை மற்றும் தலங்கம் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்றுப் பொலிஸில் சரணடைந்த 7 பேரும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 7 பேரும் மருதானை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றில் அவர்களைப் பொலிஸார் முற்படுத்தினர். அதன்போதே நீதிமன்று அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. சமூகச் செயற்பாட்டாளரான ரட்டா எனும் ரத்திந்து சேனாரத்ன மற்றும் லஹிரு வீரசேகர உட்பட 7 பேரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-இ)


சகல நாடுகளுக்குமான விசா ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்
✣ Tourist / Visit Visa - All Countries
✣ Student Visa - Canada, UK, Australia, France
✣ Work Visa - Canada
} A/L Minimum
பணியாளர்கள் (Office) உடன் தேவை.
Visa Consultant 134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna
naltcjaffna@gmail.com 077 038 5584

மின்சாரம் துண்டிக்கப்பட்டதா?
மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?
இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்
சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்
J.J GROUP 021 222 8854
(CS 363)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

A4 பேப்பர் விற்பனைக்கு
இந்தோனிசியா, இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட (70 GSM, 80 GSM) J.K, IK, MAPACHA A4 பேப்பர்கள் மொத்தமாக விற்பனைக்கு உண்டு
077 788 7271

பணிப்பெண் தேவை
வீட்டு வேலைக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி.
077 806 6063

வேலையாட்கள் உடன் தேவை
கிளிநொச்சியில் உள்ள திருமண மண்டபம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை
✣ துப்புரவாளர்
✣ பெயின்ரர் ✣ Room Boy
077 231 5521

சிறுநீரகம் தேவை
A+ இரத்த வகை உடைய சிறுநீரகம் தேவை. 52 வயதுடைய ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு சிறுநீரகம் அவசரமாக தேவையாகவுள்ளது. சிறுநீரகம் வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
076 262 5749

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழியில் A-9 வீதி முகப்புடன் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
✣ A-9 வீதியை முகப்பாகக் கொண்டது.
✣ 4 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
✣ வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், களஞ்சியசாலைகள், வாகனக்காட்சியறைகள் அமைப்பதற்கு உகந்த இடம்
✣ நாவற்குழிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்
காலை 8.00 - மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு
074 2690 854
076 2611 282

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகில் 140 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
✣ A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரத்தில் 18 அடிப்பாதையுடன்
✣ நல்ல இயற்கைச் சூழல், நல்ல தண்ணீர்
✣ 1 பரப்பின் விலை நான்கு இலட்சம் ரூபா (400000)
✣ 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
பார்வையிடும் நேரம்
காலை 8.00 - மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு
076 755 8606
077 148 8348

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
✣ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
✣ A-9 வீதியிலிருந்து இரண்டாவது காணி இரு வழிப்பாதையுடன்
✣ கைதடிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்
காலை 8.00 - மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு
076 658 3621
077 259 0391


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org